


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 197 28.02.2026 சனிக்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 197 | Saturday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

சனிக்கிழமை
(28–02–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–16
பிறை: வளர்பிறை
திதி
துவாதசி இரவு 9.03 வரை
பிறகு திரயோதசி.
நட்சத்திரம்:
புனர்பூசம் காலை 9.51 வரை
பிறகு பூசம்.
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
காலை 9.00–10.30 மணி
எமகண்டம்
நண்பகல் 1.30–3.00 மணி
சூலம் – கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 7–8 மணி.
மாலை 5–6 மணி

மேஷம் ............... ஆதரவு
ரிஷபம் .............. மேன்மை
மிதுனம் .............. பாராட்டு
கடகம் ....................... புகழ்
சிம்மம் ................... பணிவு
கன்னி ....................வெற்றி
துலாம் .................. லாபம்
விருச்சிகம் .......... ஆதாயம்
தனுசு .................. உவகை
மகரம் .......................ஈகை
கும்பம் ................ மகிழ்ச்சி
மீனம் ................... பயணம்

# திமுகவில் இணைந்தார் ஓ.பன்னீர்செல்வம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின்



**சென்னை,பிப்.28:**

தமிழ்நாட்டின் மூன்று முறை முதலமைச்சராக இருந்த ஓ. பன்னீர்செல்வம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்.

சென்னை அண்ணா அறிவாலயத்துக்கு வருகைதந்த ஓ. பன்னீர்செல்வத்தைபூங்கொத்து கொடுத்து முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் வரவேற்றார்.

ஓ. பன்னீர்செல்வத்துடன் அவரது மகனும் அதிமுக முன்னாள் எம்பியுமான ரவீந்திரநாத், உசிலம்பட்டி அதிமுக எம்எல்ஏ ஐயப்பன் ஆகியோரும் திமுகவில் இணைந்தனர்.

இந்த நிகழ்வின் போது தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் மூத்த அமைச்சர்கள், கட்சி நிர்வாகிகள் என அனைவரும் இருந்தனர்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைச் செயலாளர் பதவியில் இருந்து ஒருங்கிணைப்பாளர் பதவி வரை ஓபிஎஸ் வகித்துள்ளார். மூன்று முறை முதலமைச்சர், நிதியமைச்சர் என பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்கு பின்னர், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் எடப்பாடி கே.பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் இடையே ஒற்றைத் தலைமைப் பிரச்னை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட ஓ. பன்னீர்செல்வம் சட்ட ரீதியாகவும் பின்னடைவை சந்தித்தார். இதையடுத்து கடந்த 2024 மக்களவைத் தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் (அதிமுக இல்லாத தேசிய ஜனநாயக கூட்டணி) இணைந்து ஓபிஎஸ் போட்டியிட்டார்.

இதனைத் தொடர்ந்து ஓபிஎஸ் அதிமுக தொண்டர்கள் மீட்புக் குழுவைத் தொடங்கினாலும், அதிமுகவில் மீண்டும் இணைய தயார் என்று வெளிப்படையாகவே தெரிவித்து வந்தார்.ஆனால் ஓபிஎஸை மீண்டும் அதிமுகவில் இணைக்கும் பேச்சுக்கே இடமில்லை என்று இபிஎஸ் தெரிவித்துவிட்டார். அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட மற்றொரு தலைவர் டிடிவி தினகரனின் அமமுகவை தே. ஜ. கூட்டணியில் இணைக்க இபிஎஸ் ஒப்புக் கொண்டாலும், ஓபிஎஸ்ஸை சேர்க்க இபிஎஸ் திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

இதனிடையே, தமிழ்நாடு சட்டப்பேரவைத்தேர்தலுக்கான தேதி இன்னும் ஓரிரு வாரங்களில் அறிவிக்கப்படவிருக்கும் நிலையில், கடந்த வாரமே சட்டப்பேரவை வளாகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து ஓபிஎஸ் ஆலோசனை நடத்தியிருந்தார்.

இந்த நிலையில், தனது ஆதரவாளர்களுடன் அண்ணா அறிவாலயத்துக்கு வருகைதந்த ஓபிஎஸ், திமுக உறுப்பினர் படிவத்தைப் பூர்த்தி செய்து, முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் இணைந்தார்.

திமுகவில் இணைந்த ஓ. பன்னீர்செல்வத்துக்கு துணைப் பொதுச் செயலாளர் பதவி வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், வருகின்ற சட்டப்பேரவைத் தொகுதியில் ஓபிஎஸ்ஸுக்கு போடி தொகுதியும், அவருடன் இணைந்த அவரது ஆதரவாளர்கள் இருவருக்கும் வாய்ப்பளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வாய்ப்பு கொடுத்தால் சட்டசபை தேர்தலில் போட்டி

சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுகவில் இணைந்த ஓ.பன்னீர் செல்வம் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

பேரறிஞர் அண்ணா ஆரம்பித்த திமுகவில் தாய்க்கழகமான திமுகவில் மகிழ்ச்சியோடு இணைத்துக்கொண்டுள்ளேன். திமுகவில் தொண்டனாகத்தான் இன்று இணைந்திருக்கிறேன். திமுக வளர்ச்சிக்கு தொண்டனாக பாடுபடுவேன். பாசத்தோடு அரவணைத்த தளபதிக்கு நன்றி.

திராவிட இயக்கம், கொள்கையை காக்க திமுகவே தலைசிறந்த இயக்கம். அரசியலில் அனைத்து மக்களையும் அரவணைக்கும் அரசியல் பண்பாடு கொண்டவர் ஸ்டாலின். தமிழக மக்களுக்கு ஸ்டாலின் சிறப்பான ஆட்சியை அளித்து வருவதை நாடு கவனிக்கிறது. பெண்கள் சிரமமின்றி குடும்பத்தை வழிநடத்த அனைத்து உதவிகளையும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அளிக்கிறார். திராவிட இயக்கத்தை, சித்தாந்தத்தை கட்டிக்காப்பதில் முன்னணித்தலைவராக ஸ்டாலின் திகழ்கிறார்.

அதிமுகவின் தற்காலிக பொதுச்செயலாளர் சர்வாதிகாரியாக நடந்துகொள்ளும் எடப்பாடி பழனிசாமி என்றும் வெல்ல முடியாத சூழலை உருவாக்கி உள்ளார்.

எடப்பாடி பழனிசாமி, பொதுச்செயலாளராக பதவி ஏற்றது முதல் தற்போது வரை அதிமுகவை அழிவுப்பாதைக்குத்தான் அழைத்து செல்கிறார். பழனிசாமிக்கு தலைமைப்பண்பு இல்லை. தென்மாவட்டத்திலிருந்து எந்த ஒரு தலைவரும் மேலே வரக்கூடாது என்பதில் கவனமாக உள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் ஒரு கட்சியில் 3 முறை முதலமைச்சராக பதவி வகித்தவர், வேறொரு கட்சியில் இணைந்தது இதுவே முதல்முறை. முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் திமுகவில் இணைந்தது வரலாற்றில் பதிவானது.

ஓபிஎஸ் ஆதரவாளர்களான மனோஜ் பாண்டியன், வைத்திலிங்கம் ஆகியோர் ஏற்கனவே திமுகவில் இணைந்த நிலையில் தற்போது ஓபிஎஸ்-ம் திமுகவில் இணைந்தார்.

ஓபிஎஸ் மகன் ரவீந்திரநாத், எம்.எல்.ஏ ஐயப்பன் உள்ளிட்ட ஆதரவாளர்களும் திமுகவில் இணைந்துள்ளனர்,

# பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஆடம்பரத்தைத் தவிர்த்திடுவீர்: தொண்டர்களுக்கு வேண்டுகோள்



**சென்னை,பிப்.28:**

தமிழ்நாடு முதல்-அமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் வருகிற மார்ச் 1-ந்தேதி தனது 73-வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். இந்த நிலையில் தனது பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஆடம்பரத்தை தவிர்த்திடுவீர் என்று தொண்டர்களுக்கு மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

கலைஞர் - தயாளு அம்மாள் ஆகியோரின் மகனாகப் பிறந்து; பொதுவுடைமைப் பூமியாம் சோவியத் நாட்டின் சுடரொளி ஸ்டாலின் அவர்களின் பெயர் சூட்டப்பட்டு, கொள்கைக் கோட்டமாம் கோபாலபுரத்தில் வளர்ந்து, இளமையிலேயே இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டு, திராவிட இயக்கத்தை நோக்கி இளைஞர்களைத் திரட்டிடும் இனிய பணியைச் சுமந்து, கடந்து வந்த மேடு - பள்ளங்களைச் சமமாகப் பாவித்து ஏற்றுக் கொள்ளும்பக்குவத்தை வளர்த்துக் கொண்டு; கலைஞரிடம் பயின்ற பண்புகளோடும், கடமை உணர்வோடும் கழகத்தைக் கண்களாகவும் கலைஞரை கதிரொளியாகவும் கொண்டு, என்னால் இயன்றவரை எல்லோருக்கும் பயனுள்ள வகையில், கனிவு - துணிவு ஆகியவற்றைத் துணையாகக் கொண்டு, தொண்டூழியம் ஆற்றி வரும் எனக்கு மார்ச் 1 அன்று 73-வது பிறந்தநாள்!

1-3-2026 அன்று எனது பிறந்தநாளையொட்டி ஆர்வம் மிகுதியால், கண்ணுறுத்தும் படாடோப விளம்பரங்களைக் கட்டாயம் தவிர்த்து, அனுமதிக்கப்பட்ட நெறிமுறைகளைப் பின்பற்றி நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும். உற்சாகமும், உத்வேகமும் எல்லை மீறிப் போக அனுமதித்திடக் கூடாது.

பிறந்தநாளையொட்டி, சமுதாயத்தில் மெலிந்து நலிந்த பிரிவினரான ஏழை, எளிய மகளிர், முதியோர், ஆதரவற்றோர், திருநர்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோரின் நலன் பேணும் வகையில் இயன்ற உதவிகளைச் செய்வது; கழகக் கொடிகளைப் புதுப்பிப்பது - புதிய கொடிகளை ஏற்றி வைப்பது - கிளைக் கழகங்களின் பெயர்ப் பலகைகளைப் புதுப்பிப்பது - பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் பெயர்களில் அமைந்துள்ள படிப்பகங்களுக்குப் பயனுள்ள புதிய நூல்களை வழங்குவது - கழகத்தின் மூத்த உறுப்பினர்களைச் சிறப்பிப்பது, பெருவாரியாக இரத்தத் தானம் செய்வது போன்றவற்றை ஆற்றுவதுமே அவசியமானவை. இயக்கத்திற்கு ஆக்கமளித்திடும் இத்தகைய செயல்பாடுகளை மட்டுமே நான் பெரிதும் வரவேற்கிறேன்; சமூக உணர்வும், இயக்கப் பற்றும் மிளிரும் இத்தகைய நற்செயல்கள் எல்லா இடங்களிலும் நிகழுமானால், அவற்றையே என்னரும் தோழர்களின் இதய வாழ்த்துகளாகக் கொண்டு பெருமகிழ்ச்சி கொள்வேன்!

இன்று முதல் நமது நிலையும் நினைப்பும் எதிர்வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலையே மையம் கொண்டதாக இருந்திட வேண்டும். நாட்கள் இருக்கிறதே - என்ன அவசரம் என்று எண்ணிடாமல்,இப்போதிருந்தே தேர்தல் பணிகளைத் திட்டமிட்டுத் தொய்வின்றித் தொடர்ந்திட வேண்டும். நமது திராவிட மாடல் அரசின் திட்டங்களால் "ஸ்டாலின் தொடரட்டும்; தமிழ்நாடு வெல்லட்டும்" என்ற குரல் தமிழ்நாட்டின் பட்டிதொட்டியெங்கும் ஒலிக்கத் தொடங்கிவிட்டது. எனவே, ஏழாவது முறையும் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிட உங்களது உழைப்பு அமைந்திட வேண்டும்! அதுவே எனக்கு நீங்கள் வழங்கிடும் சிறந்த பிறந்தநாள் வாழ்த்து!

ஆடம்பரத்தைத் தவிர்த்து ஆக்கப்பூர்வமான பணிகளை அமைதியாகமேற்கொள்வீர்!இந்த எனது அன்பு வேண்டுகோளை எல்லோரும் நினைவில் கொள்வீர்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விஜய்யின் மனைவி சங்கீதா விவாகரத்து கோரி மனு!



**சென்னை,பிப்.28:**

தவெக தலைவர் விஜய்யின் மனைவி சங்கீதா விவாகரத்து கோரி மனுத் தாக்கல் செய்துள்ளார்.

நடிகரும் தவெக தலைவருமான விஜய்யுடன் விவாகரத்து கோரி, அவரது மனைவி சங்கீதா செங்கல்பட்டு குடும்பநல நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

2021-இல் நடிகை ஒருவருடன் திருமணம் மீறிய உறவில் விஜய் இருப்பதாக தெரிய வந்ததையடுத்து, விவாகரத்து முடிவை எடுத்ததாக சங்கீதா கூறியுள்ளார்.


நடிகையுடனான உறவை விஜய் தொடர்ந்ததால்தான், இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்ததாகவும் சங்கீதா தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ்ப் பெண்ணான சங்கீதா, 1999-இல் விஜய்யை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு ஒரு மகனும் மகளும் உள்ளனர்.

இந்த நிலையில்தான், சுமார் 27 ஆண்டுகால திருமண வாழ்வை முடிவுக்குக் கொண்டுவர சங்கீதா மனுத் தாக்கல் செய்துள்ளார். மேலும், இந்த வழக்கில் ஏப்ரல் 20ஆம் தேதியில் விஜய் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது.

# காவல் நிலையங்களில் சிசிடிவி கேமரா; மாநில அரசுகளுடன் மத்திய அரசு விரைவில் ஆலோசனை

**புதுடெல்லி,பிப்.28:**





காவல் நிலையங்களில் சி.சி.டி.வி. கண்காணிப்பு கேமராக்கள் செயல்படாதது தொடர்பாக கடந்த 2018-ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு தாமாக முன்வந்து பொதுநல வழக்காக விசாரித்தது. போலீஸ் நிலையங்களில் மனித உரிமை மீறல்களை தடுக்க சி.சி.டி.வி. கண்காணிப்பு கேமராக்கள் செயல்பட உரிய நடவடிக்கை எடுக்கவும், கேமரா பொருத்தப்படாத போலீஸ் நிலையங்களில் அதனை நிறுவ வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பித்தது.

அதேபோன்று சி.பி.ஐ., அமலாக்கத்துறை மற்றும் தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ.) உள்ளிட்ட புலனாய்வு நிறுவனங்களின் அலுவலகங்களிலும் கேமராக்களை நிறுவ மத்திய அரசுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஒவ்வொரு போலீஸ் நிலையத்திலும்,நுழைவு வாயில் மற்றும் வெளியே றும் இடங்கள், பிரதான வாயில், லாக்-அப் அறைகள்,

தாழ்வாரங்கள், லாபி, வரவேற்பு அறை மற்றும் லாக்-அப் அறைகளுக்கு வெளியே உள்ள பகுதிகளிலும் கேமராக்கள் பொருத்தப்படுவதை மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் உறுதி செய்ய வேண்டும் என்றும், இரவிலும் ஆடியோ மற்றும் வீடியோ காட்சிகள் பதிவாகும் வகையிலும், ஓராண்டுகள் வரை பதிவுகளை சேமித்து வைக்கும் வகையிலும் கேமராக்கள் நிறுவப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

இந்தநிலையில் அந்த வழக்கு நீதிபதிகள் விக்ரம்நாத் மற்றும் சந் தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, நீதிமன்றத்துக்கு உதவ நியமிக்கப்பட்ட மூத்த வக்கீல் சித் தார்த் தேவ், 'சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின்படி மத்திய அரசு, மாநில அரசு களுடன் ஒரு கூட்டத்தை நடத்தியது.

இதில் சில மாநிலங்கள் பங்கேற்கவில்லை. அடுத்த கூட்டம் மார்ச் 14-ந்தேதி நடக்கிறது. இந்த கூட்டத்துக்கு பின்பு அறிக்கை தாக்கல் செய்யப்படும்' என்றார். இதை ஏற்றுக்கொண்டு வழக்கு விசாரணை மார்ச் 23-ந்தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டது.



## இப்போது கூட வாக்காளர் பட்டியலுக்கு விண்ணப்பிக்க முடியும்– தேர்தல் ஆணையர்



**சென்னை, பிப்.28:**
சென்னையில் தமிழக சட்டசபை தேர்தல் தொடர்பாக தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

* சமூக வலைத்தளங்களில் வதந்தி பரப்புவோர் கண்காணிக்கப்படுவர்.

* தேர்தலில் பதிவாகும் வாக்குப்பதிவு நிலவரத்தை ECINET செயலியில் அறியலாம்.

* SIR பணியில் சிறப்பாக செயல்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களை தமிழ்நாடு நினைவில் வைத்துக்கொள்ளும்.

* தமிழ்நாட்டின் இறுதி வாக்காளர் பட்டியலில் ஆண் வாக்காளர்கள் 2 கோடியே 77 லட்சத்து 38 ஆயிரத்து 925 பேர் உள்ளனர்.

* கடைசி 2 மின்னணு வாக்கு எந்திரங்களில் வாக்கு எண்ணுவதற்கு முன்பு தபால் வாக்குகள் எண்ணி முடிக்கப்படும்.

* வேட்பாளர்கள் யாராவது ஆட்சேபம் தெரிவித்தால் VVPAT ரசீது எண்ணப்படும்.

* படிவம் 6 மூலமாக இப்போது கூட வாக்காளர் பட்டியலுக்கு விண்ணப்பிக்க முடியும் என்றார்.

## வருகிற 1-ந்தேதி த.வெ.க. செயல் வீரர்கள் கூட்டம்

**சென்னை, பிப்.28:**
த.வெ.க.பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, வரும் 1ஆம் தேதி (01.03.2026) ஞாயிற்றுக்கிழமையன்று காலை 10.00 மணி முதல், 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் கழகச் செயல் வீரர்கள் கூட்டம் முழுநாள் நிகழ்வாக நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில், தேர்தல் பரப்புரைப் பணிகள், வாக்குச்சாவடி முகவர்களின் பணிகள் உள்ளிட்ட கழகத்தின் அடுத்த கட்டச் செயல்பாடுகளை முன்னெடுப்பது குறித்து, கழகத் தலைவர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்தது போல, கலந்தாலோசிக்கப்பட உள்ளது.

தேர்தல் கண்காணிப்பாளர்கள், இணைக் கண்காணிப்பாளர்களுடன் இணைந்து மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்பில், அந்தந்த மாவட்டங்களைச் சார்ந்த தொகுதிகளில் இந்தக் கூட்டம் நடைபெற உள்ளது.

மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஏற்பாட்டில் நடைபெற உள்ள இக்கூட்டங்களில் அந்தந்தச் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பல்வேறு அணியினர் உள்ளிட்ட கழகத்தின் அனைத்து நிர்வாகிகள் மற்றும் கழகச் செயல்வீரர்கள் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

## கூடுதல் தொகுதிகளை கேட்டுள்ளோம்– தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைக்கு பிறகு பெ.சண்முகம் பேட்டி



**சென்னை, பிப்.28:**
கூடுதல் தொகுதிகளில் போட்டியிடவேண்டும் என மாநிலக்குழு தீர்மானித்துள்ளது தொகுதிகளின் எண்ணிக்கையை தீர்மானித்து விட்டுதான் அடுத்து எந்த தொகுதியில் போட்டி என்பது பற்றி கூறுவோம்

2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான திமுக கூட்டணியின் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. திமுக தலைமையிலான கூட்டணியில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு கட்சிகளும்,பேச்சுவார்த்தையை தொடர்ந்து வருகின்றன. இந்நிலையில் இன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பேச்சுவார்த்தை நடத்தியது. அதன்பின் செய்தியாளர்களை சந்தித்த அக்கட்சியின் மாநிலத் தலைவர் பெ.சண்முகம்,

"திமுக தலைமையிலான மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சட்டப்பேரவை தேர்தலை சந்திக்கிறது என முன்னறே கூறியிருந்தோம். அதனடிப்படையில் இன்று திமுக தொகுதிப் பங்கீடு குழுவுடன், எங்கள் கட்சி சார்பில் நானும், மாநில செயற்குழு உறுப்பினர்கள் கனகராஜ், சாமுவேல் ராஜ், கண்ணன் ஆகியோர் இன்று பேச்சுவார்த்தைநடத்தினோம். பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற்றது.

கூடுதல் தொகுதிகளில் போட்டியிடவேண்டும் என ஏற்கனவே மாநிலக்குழு தீர்மானித்துள்ளது. அந்த கோரிக்கையையும் பேச்சுவார்த்தைக் குழுவிடம் தெரிவித்துள்ளோம். அவர்கள் கலந்துபேசி தெரிவிப்பதாக கூறியுள்ளனர்.

தொகுதிப் பட்டியல் தொடர்பாக எதுவும் வழங்கவில்லை. முதலில் தொகுதிகளின் எண்ணிக்கையை தீர்மானித்துவிட்டுதான் அடுத்து எந்த தொகுதியில் போட்டி என்பது பற்றி கூறுவோம். தொகுதியை குறைக்கவேண்டும் என்பதுபோன்ற கோரிக்கையை எதுவும் திமுக வைக்கவில்லை. பாஜக-அதிமுக கூட்டணியை முறியடிக்கும் வகையில் யார் இந்த அணிக்கு வலுசேர்த்தாலும் அது நல்லதுதான். இரண்டாம் சுற்று பேச்சுவார்த்தை விரைவில் நடைபெறும். மாநிலங்களவை தேர்தலில் கூட்டணி கட்சியினர் யார் நின்றாலும் அவர்களுக்கு எங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பார்கள்." என தெரிவித்தார்.

## தீவிர மனவேதனை– விஜயிடம் இருந்து விவாகரத்து கோரி மனைவி சங்கீதா மனுத்தாக்கல்



**சென்னை, பிப்.28:**
நடிகரும், தமிழக வெற்றிக் கழக தலைவருமான விஜயின் மனைவி சங்கீதா விவாகரத்து கோரி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் விஜய் மனைவி சங்கீதா விவாகரத்து கோரி மனுத்தாக்கல் செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

சங்கீதா விஜயை பிரந்து வாழ்ந்து வருவதாகக் கூறப்படும் நிலையில் விவாகரத்து கோரி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

அந்த மனுவில், விஜய்க்கு நடிகையுடன் திருமணம் மீறிய உறவு இருப்பதாகக் குற்றம்சாட்டி சங்கீதா விவாகரத்து மனுவில் குறிப்பிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## ஓ.பன்னீர்செல்வம் தி.மு.க.வில் இணைந்ததை கொண்டாடிய அ.தி.மு.க.வினர்



**போடி, பிப்.28:**
தமிழகம் முழுவதும் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வத்தினுடைய அரசியல் நிலைப்பாடு குறித்து எதிர்பார்ப்பு நேற்று நிறைவுக்கு வந்தது.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பிறந்த நாள் விழாவை போடியில் கொண்டாடியஓ.பன்னீர்செல்வம் பத்திரிகையாளர் சந்திப்பில் சுமார் ஒரு மணி நேரம் தனது அரசியல் களம்குறித்து மனம் திறந்து பேட்டியளித்தார்.

அதனைத் தொடர்ந்து அவர் தி.மு.க.வில் இணைவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. சில நாட்கள் இதுகுறித்து எதுவும் தகவல் தெரிவிக்காத நிலையில் இன்று காலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து தன்னை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டார்.

கடந்த சில நாட்களாகவே ஓ.பி.எஸ். நடவடிக்கையில் அதிருப்தியடைந்த அ.தி. மு.க.வினர் தற்போது அவர் தி.மு.க.வில் இணைந்ததை கொண்டாடி வருகின்றனர். ஓ.பன்னீர்செல்வத்தின் சொந்த தொகுதியான போடி பஸ் நிலையம் தேவர் சிலை அருகில் அவர் கட்சியை விட்டு விலகியதை பட்டாசு வெடித்து கொண்டாடினர்.

இதுவரை அ.தி.மு.க.வை பிடித்திருந்த தீய சக்தி ஒழிந்தது. துரோகி பன்னீர்செல்வம் ஒழிக, போய்க்கோ போய்க்கோ என்று கோசமிட்டபடி பட்டாசு வெடித்து அவ்வழியாக சென்ற பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். இதுகுறித்து நிர்வாகிகள் கூறுகையில் சாதாரண தொண்டனாக இருந்த ஓ.பி.எஸ்.சை 3 முறை முதலமைச்சராக அமரவைத்து அழகு பார்த்தது அ.தி.மு.க. ஆனால் அவர் அதற்கு விசுவாசமாக இல்லாமல் தி.மு.க.விற்கு சென்று விட்டார். அவர் எந்த இடத்திலும் விசுவாசமாக இருக்க மாட்டார். எனவே அ.தி.மு.க.வை பிடித்த தீயசக்தி ஒழிந்து விட்டது. இதனால் வரும் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைப்பது உறுதி என உற்சாகமாக கூறினர்.

## ஓ.பி.எஸ். முடிவு மிகவும் துரதிருஷ்டவசமானது - துரோகிகளின் அழிவுகாலம் நெருங்கிவிட்டது: சசிகலா



**சென்னை, பிப்.28:**
தாய் கழகம் என்று நினைத்துக்கொண்டு தி.மு.க.வில் தங்களை இணைத்துக்கொள்வது ஒரு தவறான முடிவாகத்தான் அமைந்துள்ளது.

இந்தநிலைமைகளுக்கெல்லாம் காரணம் ஒன்றே ஒன்றுதான்.

சசிகலா வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

தமிழக முன்னாள் முதலமைச்சரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடியும், சட்டமன்ற உறுப்பினருமான ஓ.பன்னீர்செல்வம் அவர்களின் இந்த முடிவு மிகவும் துரதிருஷ்டவசமானது.

தமிழகத்திலிருந்து அகற்றப்பட வேண்டிய ஒரு தீய சக்தியாக திமுக விளங்கும் நிலையில் தாய் கழகம் என்று நினைத்துக்கொண்டு தி.மு.க.வில் தங்களை இணைத்துக்கொள்வது ஒரு தவறான முடிவாகத்தான் அமைந்துள்ளது.

ஆனால் இந்த நிலைமைகளுக்கெல்லாம் காரணம் ஒன்றே ஒன்றுதான். அவர் வேறு யாருமில்லை. தான் மட்டும்தான் அ.தி.மு.க. என்று தம்பட்டம் அடித்துக்கொண்டு தனக்கு தானே தலைவராக அறிவித்துக் கொண்டவர்கள், தன்னை சுற்றியுள்ளவர்களையும் ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள், தி.மு.க.வினரின் முழு கட்டுப்பாட்டில் இருந்து கொண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள அனைவரையும் வெளியேற்றி விட்டு புரட்சித்தலைவர் மற்றும் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கொள்கைகளுக்கு விரோதமாக தொடர்ந்து செயல்பட்டுவரும் துரோகிகளின் அழிவுகாலம் நெருங்கிவிட்டது.

இந்நிலையில் வரும் சட்டமன்ற தேர்தலில் எனது தலைமையில் புரட்சித்தலைவரின் ரத்தத்தின் ரத்தங்களும், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிவந்த சிங்கங்களும் எதிரிகளையும் துரோகிகளையும் வீழ்த்துவது உறுதி.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ரம்ஜான் நோன்பு எதிரொலி - ஐக்கிய அரபு நாடுகளுக்கு 70 சதவீதம் முட்டை ஏற்றுமதி பாதிப்பு



**நாமக்கல், பிப்.28:**
நாமக்கல் மண்டலத்தில் சுமார் 1,100-க்கும் மேற்பட்ட முட்டை கோழிப்பண்ணைகள் உள்ளன. இவற்றில் சுமார் 10 கோடி கோழிகள் வளர்க்கப்படுகின்றன. தினசரி சுமார் 7 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. நாள்தோறும் சுமார் 70 லட்சம் முட்டைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியாவில் நாமக்கல் பகுதியில் இருந்து மட்டுமே முட்டை அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

சவுதி அரேபியா, ஈரான், ஈராக், ஓமன், பஹ்ரைன், மஸ்கட் போன்ற ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் ஒரு சில ஆப்பிரிக்க நாடுகளுக்கும் முட்டை ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் துபாய், ஓமன், பஹ்ரைன், மஸ்கட் உள்ளிட்ட ஐக்கிய அரபு நாடுகளில் தற்போது ரம்ஜான் நோன்பு தொடங்கியுள்ளது. முட்டையின் நுகர்வு கணிசமாக குறைந்துள்ளது. இதனால் அந்நாடுகளுக்கான முட்டை ஏற்றுமதியில் சரிவு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து நாமக்கல்லை சேர்ந்த முட்டை ஏற்றுமதியாளர் செந்தில் கூறுகையில், நாமக்கல்லில் இருந்து வளைகுடா நாடுகளான துபாய், கத்தார், ஓமன், பஹ்ரைன், சார்ஜா ஆகிய நாடுகளுக்கு நாள் ஒன்றுக்கு 50 லட்சம் முட்டைகள் ஏற்றுமதி ஆகி வந்தது.

தற்போது ரமலான் நோன்பு கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் அந்த நாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி 70 சதவீதம் வரை குறைந்துள்ளது. 10 லட்சம் முட்டைகள் மட்டுமே தற்போது ஏற்றுமதி ஆகி வருகிறது என்றார்.

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் பறவை காய்ச்சல் தொற்று சமீபத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு கருதி இந்தியாவில் இருந்து கோழி இறைச்சி, முட்டை இறக்குமதி செய்ய சவுதி அரேபியா தடை விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ‘பா.ஜ.க. போன்ற கட்சிகளில் சேராமல் தி.மு.க.வில் சேர்ந்தது அவர் ஓ.பி.எஸ். நன்மதிப்பை உயர்த்துகிறது’ திருமாவளவன்



**சென்னை, பிப்.28:**
தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் இன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் அதிகாரப்பூர்வமாக திமுகவில் இணைந்தார். அவர் உடன் அவரது மகன் மற்றும் முன்னாள் எம்.பி. ரவீந்திரநாத் குமார், மற்றும் உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் பி. அய்யப்பன் ஆகியோரும் திமுகவில் இணைந்தனர். இந்நிலையில் திமுகவில் ஓபிஎஸ் இணைந்தது தொடர்பாக பேசிய திருமாவளவன்,

"ஓ.பி.எஸ். தி.மு.க.வில் இணைந்தது தி.மு.க.விற்கு மட்டுமல்ல, அதன் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கும் கூடுதல் வலிமை சேர்ந்திருப்பதாக வரவேற்று மகிழ்கிறோம், அவருக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

அ.தி.மு.க.வை ஒருங்கிணைக்க வேண்டும் என்ற முயற்சியை அவர் மேற்கொண்டார். குறிப்பாக எடப்பாடி உடன் இணைய முயன்றார். பா.ஜ.க. போன்ற கட்சிகளில் சேராமல் தி.மு.க.வில் சேர்ந்தது அவர் மீதான நன்மதிப்பை உயர்த்துகிறது. அவர் திராவிட பாரம்பரியத்தில் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா போன்ற தலைவர்களுடன் பணியாற்றி வளர்ந்தவர்.

அத்தகைய பாரம்பரியத்தை பாதுகாக்கும்வகையில் மீண்டும் தன்னை திராவிட பாசறையில் இணைத்துக்கொண்டது வரவேற்க்கத்தகுந்தது." என தெரிவித்தார்.

## உடல் உறுப்புகள் தானம் செய்த சிறுமியின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் ஆறுதல்



**கோவை, பிப்.28:**
கோவை தெலுங்குபாளையம் ராமசாமி கவுண்டர் லே-அவுட்டை சேர்ந்தவர் சந்தோஷ். மாநகராட்சி 73-வது வார்டு தி.மு.க. கவுன்சிலராகவும், நகரமைப்பு குழு தலைவராகவும் உள்ளார். இவரது மனைவி சுகன்யா. இவர்களது மகள் வெண்பா(வயது8).

இந்த நிலையில் சிறுமி வெண்பா உடல்நலம் பாதிக்கப்பட்டு கோவை கே.எம்.சி.எச் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அங்கு மருத்துவர்களின் பரிசோதனையில், சிறுமி மூளைச்சாவு அடைந்தது தெரியவந்தது. இதனை டாக்டர்கள் கவுன்சிலர் சந்தோஷ் மற்றும் குடும்பத்தினரிடம் தெரிவித்தனர். அவர்கள் தங்களது மகள் உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வந்தனர்.


தமிழ்நாடு உறுப்பு தான ஆணையத்தின் அனுமதியுடன் அவரது கல்லீரல், சிறுநீரகங்கள், கண்கள், எலும்பு மற்றும் தோல் ஆகியவை தானமாக பெறப்பட்டது. சிறுமியின் உடல் உறுப்பு தானத்தால் 7 பேர் மறுவாழ்வு பெற்றனர்.

இந்த நிலையில் கோவைக்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வந்திருந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், உடல் உறுப்பு தானம் செய்த சிறுமி வெண்பாவின் வீட்டிற்கு சென்றார்.

அங்கு சிறுமியின் பெற்றோரான கவுன்சிலர் சந்தோஷ், அவரது மனைவி சுகன்யா ஆகியோரை நேரில் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

அப்போது அவருடன் அமைச்சர்கள் முத்துசாமி, மு.பெ. சாமிநாதன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி உடனிருந்தனர்.

## இலவசங்களை வாரி வழங்கி முதலமைச்சர் புண்ணியம் செய்கிறார்– திருவாவடுதுறை ஆதீனம் புகழாரம்



**திருவிடைமருதூர், பிப்.28:**
தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே திருவிடைமருதூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிக பரமாச்சாரியார் சுவாமிகள், அமைச்சர் கோவி. செழியன், முன்னாள் எம்.பி. ராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் பேசியதாவது:-

திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோவிலில் வரகுண பாண்டியன் வழிபட்டு பிரம்மஹத்தி தோஷம் நீக்கப் பெற்றார். 27 நட்சத்திரங்கள் வழிபட்ட பெருமையுடையதாக இத்தலம் விளங்குகிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் பதிகம் பாடி உள்ளனர். மனிதப்பிறவி எடுத்துள்ள நாம் இத்தகைய திருமுறை பதிகங்களை தவறாது ஓத வேண்டும். தீயவழியில் செல்பவர்களை நல்வழிப்படுத்துவது திருமுறைகளும், சைவ சித்தாந்தமும் என்பதை உணர வேண்டும். எந்த சூழ்நிலையிலும் பாவம் செய்யக்கூடாது, பிறருக்கு உதவி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு பகுதியிலும் கோவில்கள் மற்றும் கோசாலைகளை முறையாக பாதுகாக்கப்படுகிறது. பசிப்போர்க்கு உணவு தருவது மிகப்பெரிய புண்ணியம். கோவில்களில் மதியம் அன்னதானம் திட்டத்தை தமிழகத்தின் ஆட்சியாளர்கள் தொடர்ந்து நடத்தி வருவது பாராட்டுக்குரியது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ரூ.5 ஆயிரம் மற்றும் இலவசங்களை வாரி வழங்கி புண்ணியம் செய்துள்ளார். இலவசம் கொடுப்பதும் தர்மம் தான். புண்ணியம் தான் நம்மை உயர்ந்த நிலைக்கு இட்டுச்செல்லும் என்று பேசினார்.

## மாம்பழ சின்னம் தொடர்பான வழக்கை வாபஸ் பெற்றார் ராமதாஸ்





**சென்னை, பிப்.28:**
பா.ம.க.வுக்கு உரிமை கொண்டாடுவது தொடர்பாக டாக்டர் ராமதாசுக்கும், அவரது மகன் டாக்டர் அன்புமணிக்கும் இடையே மோதல் இருந்து வருகிறது.

இந்த நிலையில், பா.ம.க.வின் மாம்பழம் சின்னம் தொடர்பாக அன்புமணியின் தி.நகர் முகவரிக்கு தேர்தல் ஆணையம் கடந்த ஆண்டு கடிதம் அனுப்பியது. இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில், டாக்டர் ராமதாஸ் வழக்கு தொடர்ந்தார்.

அதில், பா.ம.க., தலைவராக நான் தான் உள்ளேன். எனவே, என்னுடைய முகவரிக்குதான் தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்ப உத்தரவிட வேண்டும். அன்புமணி முகவரிக்கு அனுப்பக்கூடாது என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, இந்த மனுவுக்கு 3 வாரத்துக்குள் பதில் அளிக்கும்படி தேர்தல் ஆணையம், அன்புமணி தரப்புக்கு உத்தரவிட்டது.

இந்த நிலையில், அன்புமணி மீதான வழக்கை வாபஸ் பெறுவதாக ஐகோர்ட்டில் டாக்டர் ராமதாஸ் தரப்பில் இன்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே சிவில் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளதால், இந்த வழக்கை வாபஸ் பெறுவதாக கூறப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவத்சவா, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர், வழக்கை வாபஸ் பெற அனுமதித்து தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.























ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER



ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


































# கவிதை அரங்கம்!






அம்மாவை
விட்டுகொடுக்காத அப்பா
அப்பாவை
விட்டுகொடுக்காத அம்மா
இவர்களைவிடவா சிறந்த
காதல்ஜோடி
இவ்வுலகிலிருக்க
போகிறார்கள்

சத்தமின்றி
யுத்தம் செய்யும்
உன் பார்வையில்
ரத்தமின்றி
போர்க்களமானது
மனம்...!

ஒட்டி
கொண்டிருக்கும்
தாடிக்குள்
சிக்கி கொள்கிறது
மனம் தினம்

## வாழ்க்கை தத்துவம்...



இன்பத்திலும் துன்பத்திலும் மனம்விட்டு பேச துணை இல்லாதபோது தான் தெரியும், உண்மையான் அன்பின் பெருமை.

மௌனத்தில் வார்த்தைகளையும், கோபத்தில் அன்பையும் உணர்ந்துகொள்வது தான் உறவு; புரிதல் இருந்தால் பிரிதல் இல்லை.

உங்கள் புன்னகையில் உள்ள சோகத்தையும், கோபத்தில் உள்ள காதலையும், மௌனத்தில் உள்ள காரணத்தையும் யார் புரிந்துகொள்கிறார்களோ அவர்களே உங்கள் அன்புக்கு உரிமை உடையவர்.

உரிமை இல்லாத உறவும், உண்மை இல்லாத அன்பும், நேர்மை இல்லாத நட்பும், நம்பிக்கை இல்லாத வாழ்க்கையும் என்றும் நிரந்தரமில்லை.

இழக்கும் வரை ஒருவரின் அருமை நமக்குப் புரிவதில்லை.

# நடைபாதை நட்சத்திரம்

" கடலூர் பைபாஸ் ரோட்டில் நடை பாதையில் தினமும் படுத்து உறங்கி பகலில் கிழக்கூத்தாடி வித்தை செய்து வயிறு பிழைக்கும் குடும்பம் வீராசாமி உடையது.

தினமும் அருகில் உள்ள பஸ்டாண்டு ரயில்வே ஸ்டேஷன் மற்றும் பொது இடங்களில் கயிற்றில் நடப்பது இரும்பு கம்பியில் புகுந்து வெளியில் வருவது தீ வட்டத்தில் பாய்ந்து வெளிப்படுவது என்று வித்தை காட்டுவது அவர்கள் குடும்பத்தின் தொழில். .

வீராசாமி அவர் மனைவி தனம் மகன் பட்டி அவன் மனைவி கலா மற்றும் பேரன் குமார் , பேத்தி சரசு இவர்களின் குடும்பம் .

நடை பாதை தான் இவர்கள் வீடு வாசல் வசந்த மாளிகை இப்படி முப்பது ஆண்டுகள் கடந்து விட்டது வாழ்க்கை .

வாழும் வாழ்க்கையை நொந்து கொண்டாலும் சில நாள் வயிறு நிறையும் பல நாள் பட்டினி தான் பதில். இருந்தும் வேறு தொழிலோ படிப்போ எதுவும் தெரியாது முயற்சி செய்ய நேரமோ எண்ணமோ இல்லை .

பட்டியின் மகன் குமார் கொஞ்சம் மாறுபட்டவன் . தினமும் தொழில் முடிந்து ஓய்வு நேரத்தில் பழைய பேப்பர் நோட்டுகளில் கிறுக்குவான் அழகாக படம் வரைவான் .

நெடுநாளாக பார்த்து வந்த ஒரு பெரியவர் ராஜன் குமாரை அழைத்து தினமும் மாலையில் கல்வி அறிவு கொடுத்தார் . அவன் ஆர்வம் ஈடுபாடு பார்த்து அவனை ஒரு பள்ளியில் சேர்த்து விட்டார் .

பள்ளி முடிந்து கல்லூரிக்கும் அவர் உதவி செய்தார் . அவனின் புத்தக மூட்டை கல்வி சம்மந்தமான எல்லாம் ராஜன் வீட்டில் தான் . அவனுக்கு படுக்க படிக்க சாப்பிட உணவு எல்லாம் அவர் தான்.

யாரும் இல்லாத ராஜன் அவர்களுக்கு முழுப் பிடிப்பு குமார் தான் . ராஜன் வயது எழுபது தாண்டியது .

குமார் நன்கு படித்து வேலைக்கு சென்றான். அதற்குள் ராஜன் அவன் அரசாங்க வேலைக்கு செல்ல பயிற்சி கொடுத்து தேர்வு எழுத உதவினார் .

குமார் விரைவில் தேர்வு பெற்று அரசாங்க வேலையில் அமர்ந்தான். ராஜன் தன் சொத்துக்களை விற்று குமார் குடும்பத்திற்கு ஒரு வீடு கட்டிக் கொடுத்து சின்ன நடை பாதை சிற்றுண்டி தள்ளுக் கடை ஆரம்பித்து கொடுத்தார் .

தன் சொந்த முயற்சியில் தன் உறவினர் ஒருவரின் மகள் ராணியை குமாருக்கு மணம் முடித்து வைத்தார்.

குமார் - ராணி தம்பதிக்கு ராகுல் என்கிற மகன் பிறந்தான். ராஜன் ராகுலை குமாரை விட அதிகம் கவனம் செலுத்தி படிக்க வைத்தார் .

ராஜன் உடல் மோசமாகி படுகையில் விழுந்தார். வீராசாமி குடும்பமும் குமார் குடும்பமும் நன்கு கவனித்து ராஜன் இறுதி காலத்தை ஆசையை நிறைவேற்றி வைத்தனர்.

வீராசாமி குடும்பம் நன்கு தலைநிமிர ஆரம்பித்தது . சரசுக்கு நல்ல இடத்தில் திருமணத்தை முடித்தார் பட்டி .

ராஜன் இறந்ததும் அவர் நினைவாக குமார் மற்றும் வீராசாமி குடும்பம் வருடத்திற்கு இரண்டு நடை பாதை பிள்ளைகளை தத்து எடுத்து கல்வி வசதி செய்து கொடுத்தனர் .

நடை பாதையில் இருந்து உயர்ந்த குமார் தன் மகன் ராகுலை கலெக்டர் ஆக்கி அழகு பார்த்தான். நடைபாதை நட்சத்திரமாக உருவெடுத்த ராகுல் பிற்காலத்தில் தன் பூர்வீகத்தை பற்றி தெரிந்து கொண்டு ஏழை எளியோருக்கு அடிப்படை வசதி உணவு உடை தங்கும் இடம் கல்வி கற்க வழி செய்தான் .

ஒரு நடைபாதை குமார் கல்வி அறிவு பெற்று உயர்ந்திட பல ஆயிரம் நடை பாதை குடும்பம் விடியல் தேட வழி செய்தான் ராகுல் .

எல்லாவற்றிருக்கும் காரணமான தன் தாத்தா ராஜன் போட்டோவை தன் வீட்டிலும் அலுவலகத்திலும் மாட்டி வைத்து தினமும் மானசீகமாக பூஜை செய்தான் ராகுல் .... "

**ஆர்.சீதாராமன்.**
– சீர்காழி.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*பேனை தொடைச்சி பரண்ல இருந்த சாமானை எல்லாம் இறக்கி, ஏத்தி, சுண்ணாம்பு அடிச்சு.. வீட்டைக் கழுவி.. ஒரு வாய் பொங்கல் சாப்பிடுறதுக்கு இந்த வீட்ல என்னவெல்லாம் பண்ண வேண்டியிருக்கு?*



# தினம் ஒரு சமையல்



## கருவாட்டுக் குழம்பு

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| குச்சிக் கருவாடு | -100 கிராம் |
| கருவாடு | -5 துண்டு |
| சின்ன வெங்காயம் | -சிறிதளவு |
| பூண்டு | -சிறிதளவு |
| தக்காளி | -3 |
| தேங்காய் | -சிறிதளவு |
| குழம்பு மசாலா தூள் | -சிறிதளவு |
| புளிக் கரைசல் | -தேவையான அளவு |
| உப்பு | -தேவையான அளவு |
| எண்ணெய் | -தேவையான அளவு |
| கருவேப்பில்லை | -சிறிதளவு |
| பச்சை மிளகாய் | -2 |

செய்முறை:



கடாயில் சிறிதளவு எண்ணெய் ஊற்றி கடுகு,உளுந்து சேர்த்து கடுகு வெடிக்கவும் வெங்காயம்,பூண்டு சேர்த்து வதக்கவும்

காரத்திற்கு எற்ப மிளகாய் சேர்க்கவும்,அதனுடன் கருவேப்பில்லை சேர்த்து வதக்கவும். தக்காளி,சிறிதளவு உப்பு சேர்த்து நன்றாக வதக்கவும். தேங்காய் சிறிதளவு அரைத்து விழுது சேர்க்கவும்,காரத்திற்கு ஏற்ப குழம்பு மசாலா சேர்த்து கொதிக்க விடவும்.

குச்சிக் கருவாடு சிறிது நேரம் ஊற வைத்து தலை பகுதியை நீக்கி சுத்தம் செய்யவும்,துண்டு கருவாடு நன்றாக கழுவி எடுத்துக் கொள்ளவும்.

குழம்பு நன்றாக கொதித்த பிறகு புளிக் கரைசல் சிறிதளவு சேர்த்து நன்றாக கொதிக்க விடவும்.

பின்னர்,கழுவி வைத்த கருவாடு சேர்த்து மிதமான சூட்டில் கொதிக்க விடவும்.

நன்றாக கொதித்த பின்னர் இறக்கும் போது 1 ஸ்பூன் நல்லெண்ணெய் சேர்த்து இறக்கவும்.மிகவும் மணமான கருவாட்டுக் குழம்பு தயார்.

## முடக்கத்தான் பயன்கள்



வாத நோய்கள்:
பொதுவாக வாத நோய்கள் அதிகமா வரும் காலமா, குளிர் காலமான ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்கள் இருக்குன்னு சித்த மருத்துவத்துல சொல்றாங்க. இந்த முடக்கத்தான் கீரை, வாத நோய்களுக்கு நல்ல தீர்வா இருக்கு.

மலச்சிக்கல், கரப்பான், கிரந்தி:
முடக்கத்தான் கீரையில வைட்டமின்களும், தாது உப்புகளும் இருக்கு. இதை உணவுல தொடர்ந்து சேர்த்துட்டு வந்தா மலச்சிக்கல், மூல நோய்கள், கரப்பான், கிரந்தி, பாதவாதம் போன்ற நோய்களும் குணமாக உதவும்.

தோல் நோய்கள்:
முடக்கத்தான் கீரை தோல் நோய்களுக்கு சிறந்த நிவாரணமா இருக்கு. முடக்கத்தான் கீரையை நல்லா அரைச்சு சொறி, சிரங்கு மாதிரி தோல் நோய் இருக்கும் இடத்துல பற்று வச்சா நல்ல நிவாரணம் கிடைக்கும்.

மூல நோய்:
மலச்சிக்கல்னால மூல வியாதி வந்தவங்க தினமும் பச்சையா கொஞ்சம் முடக்கத்தான் கீரையை சாப்பிட்டு வந்தா, மூல நோய் விரைவில் குணமாகும்.

காது வலி:
காது வலி பிரச்சனைகளுக்கு முடக்கத்தான் கீரையை நல்லா அரைச்சு சாறெடுத்து, அதுல சில துளிகளை காதுகளுக்குள் விட காது வலி நீங்கும்.

மாதவிடாய் பிரச்சனைகள்:
பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் பிரச்சனைகளுக்கு நல்ல தீர்வா முடக்கத்தான் செயல்படுது.

குழந்தை பெற்ற பெண்களுக்கு...
இந்த முடக்கத்தான் கீரையை நல்லா அரைச்சு குழந்தை பெற்ற பெண்களுக்கு அடிவயித்துல பூசி வந்தா கருப்பையில உள்ள நச்சுக்கள் வெளியேறும்.

மூட்டு வலி:
முடக்கத்தான் கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தா, உடல்ல வாதத் தன்மை கட்டுப்பட்டு, மூட்டு வலியை போக்கும். முடக்கத்தான் இலைகளை ஆமணக்கு எண்ணையில நனைச்சு எல்லா மூட்டு பகுதிகளிலும் தேச்சு வந்தாலும் மூட்டு வலியிலிருந்து குணம் கிடைக்கும்.

# சினிமா

## ஏ.ஆர். ரஹ்மானை திருமணம் செய்ய ஆசைப்பட்ட பிரபல நடிகை.. யார் தெரியுமா?



இசைப்புயல், ஆஸ்கர் நாயகன் என ரசிகர்களால் கொண்டாடப்படுபவர் ஏ.ஆர். ரஹ்மான். இவர் இசையில் அடுத்ததாக பெத்தி, மூன் வாக், ராமாயணா பார்ட் 1 மற்றும் பார்ட் 2, கில்லர் என பல படங்கள் வெளிவரவுள்ளது. இதில் ராமாயணா திரைப்படத்தில் உலக புகழ்பெற்ற இசையமைப்பாளர் Hans Zimmer உடன் இணைந்து ரஹ்மான் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரை பிரபலங்கள் அவ்வப்போது அளிக்கும் பேட்டி இணையத்தில் வைரலாகும். அந்த வகையில் பிரபல நடிகை மோகினி சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில், ஏ.ஆர். ரஹ்மானை திருமணம் செய்ய ஆசைப்பட்டதாக கூறியுள்ளார்.

இதில், “நான் ஏ.ஆர். ரஹ்மானின் தீவிர ரசிகை, வெறித்தனமான அன்பு இருந்தது என்றே சொல்லலாம். அவர் இஸ்லாமிற்கு மாறியது எனக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தியது. அப்போது நான் இந்துவாக இருந்தேன். திலீப் என்ற பெயரே போதுமானதாக இருந்தது, மதம் மாறாமல் இருந்திருந்தால் வீட்டில் இவரை எனக்கு பிடித்திருக்கிறது, திருமணம் செய்துகொள்ள வேண்டும் என சொல்வதற்கு வசதியாக இருந்திருக்கும்” என கூறியுள்ளார்.

ஏ.ஆர். ரஹ்மானை திருமணம் செய்ய ஆசைப்பட்டதாக நடிகை மோகினி பேசியது தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. இவர் தமிழில் வெளிவந்த கூட்டு புழுக்கள் படத்தின் மூலம் அறிமுகமானார். இதை தொடர்ந்து ஈரமான ரோஜாவே, நாடோடி பாட்டுக்காரன் போன்ற படங்களில் நடித்து பிரபலமானார். பின் 2011ஆம் ஆண்டுக்கு பின் சினிமாவிலிருந்து விலகிவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



சமீபத்தில் நடந்த FILMFARE விருது விழாவில் நந்திதா கலந்து கொண்டிருக்கிறார். அங்கு அவர் தாராள கவர்ச்சி உடையில் தான் சென்றிருக்கிறார்.

ஹாட் உடையில் இருக்கும் ஸ்டில்களை நீங்களே பாருங்க.

## தெறி ரீ-ரிலீஸ்.. முன்பதிவில் செய்துள்ள வசூல் எவ்வளவு தெரியுமா? ரொம்ப கம்மி



இயக்குநர் அட்லீ இயக்கத்தில் தளபதி விஜய் நடிப்பில் உருவாகி 2016ஆம் ஆண்டு வெளிவந்த படம் தெறி. இப்படத்தை கலைப்புலி எஸ். தாணு தயாரித்திருந்தார். இப்படத்தில் விஜய்யுடன் இணைந்து சமந்தா, ஏமி ஜாக்சன், இயக்குநர் மகேந்திரன், மொட்டை ராஜேந்திரன் ஆகியோர் நடித்திருந்தனர்.

மேலும், நடிகை மீனாவின் மகள் நைனிகா இப்படத்தில் விஜய்க்கு மகளாக நடித்து சினிமாவில் அறிமுகமானார். ஜி.வி. பிரகாஷ் இப்படத்திற்கு இசையமைத்திருந்தார். 2016ல் வெளிவந்த தெறி படம் உலகளவில் ரூ. 150+ கோடிக்கும் மேல் வசூல் செய்து பிளாக்பஸ்டர் வெற்றிபெற்றது.

ஜனவரி 9ஆம் தேதி விஜய்யின் ஜனநாயகன் படம் வெளியாகாத காரணத்தினால், அதன்பின் தெறி படத்தை ரீ-ரிலீஸ் செய்ய தயாரிப்பாளர் தாணு திட்டமிட்டார். ஆனால், அப்போது வெளிவரவிருந்த புதிய திரைப்படங்களின் தயாரிப்பாளர்கள், இப்போது தெறி ரீ-ரிலீஸ் ஆனால் எங்களுடைய படங்களின் வசூலுக்கு பாதிப்பு ஏற்படும் என கேட்டுக்கொண்டதால் ரீ-ரிலீஸை தள்ளிவைத்ததாக தயாரிப்பாளர் தாணு பேட்டி ஒன்றில் கூறியிருந்தார்.

ஆனால், இன்று தெறி படம் ரீ-ரிலீஸ் ஆகியுள்ளது. கடந்த வாரம் கில்லி ரீ-ரிலீஸை தொடர்ந்து இந்த வாரம் தெறி ரீ-ரிலீஸ் ஆகியுள்ளது என்பது விஜய் ரசிகர்களுக்கு கொண்டாட்டம்தான். இந்த நிலையில், இதுவரை நடந்துள்ள முன்பதிவில் இப்படம் ரூ. 20+ லட்சம் மட்டுமே வசூலித்துள்ளது. இது விஜய்யின் படத்திற்கு மிகவும் குறைவாகும். பொறுத்திருந்து பார்ப்போம் வரும் நாட்களில் எவ்வளவு வசூல் செய்யப்போகிறது என்று.

# சிவன் சொத்து குலநாசம் என்று கூறுவார்கள்

பொதுவான விளக்கம் சிவன் கோவில் சொத்தை அபகரித்தால் குலம் நாசம்.

வித்தியாசமான சிந்தனைகோணத்தில் இப்படியும் சிந்திக்கலாம்.

இந்து சமயத்தில் பெருமாள்,சிவன், என இரு பெரும்தெய்வங்கள் உண்டு.

இதில் பெருமாள் பார்ப்பதற்கு பொன்பொருள் ஆடை ஆபரணங்கள், நைவேத்தியங்கள் என கண்களை கவரும் வகையில் இருப்பார்.

ஆனால் ஈசன் ஜடாமுடியுடன் இடுப்பில் புலித்தோல் தரித்து உடலில் சுடுகாட்டுச்சாம்பல் பூசிக்கொண்டு கையில் திருவோடு ஏந்தி பார்ப்பதற்கு பரதேசிக்கோலத்தில் இருப்பார்.

பெருமாளிடம் உலகியலுக்கு தேவையான அனைத்தும் இருப்பதால் அவர்மீது பக்திகொண்டு மக்கள் வழிபட்டு அவரிடம் கோரிக்கை வைப்பது இயல்பான விசயம்.



ஆனால் ஈசன் அப்படி அல்ல.. அவர்மீது பக்தியை காட்டிலும் பயம் வருவதுதான் நிதர்சனம். அவருடைய அலங்காரம் அப்படி.

பெருமாளை யார் வேண்டுமானாலும் வணங்கலாம். ஆனால் ஈசனை வணங்க ஈசனே தேர்தெடுத்தால் மட்டுமே அவர் மீது பக்தி கொள்ளமுடியும்.

பெருமாளை வணங்குவது தகப்பனின் கையை மகன் பிடித்துச் செல்வது போலாகும். தகப்பனின் கையை பிடித்துச்செல்லும் குழந்தை வழியில் ஏதாவது பள்ளம் வந்தால் கிழே விழுவதற்கு வாய்ப்பு அதிகம்.
ஈசனை வணங்குவது தகப்பன் குழந்தையின் கையை பிடிப்பதுபோலாகும்.

தகப்பனால் கரம்பற்றி அழைத்துச்செல்லப்படும் குழந்தை கீழேவிழுவதற்கோ. வழிதவறவோ வாய்ப்பே இல்லை.
சிவன் சொத்து எனப்படுவது திருநீரும் ருத்ராட்சமுமே.

இதை அணிந்தால் அவரது குலம் நாசமாகும்.
அதாவது அவரது பாவங்கள் அனைத்தும்நாசமாகும். அவரது மறுபிறப்பும் நாசமாகும்.

அவரால் அவரது வம்சமே பிறவிக்கடலில் இருந்து மீண்டு பிறவாநிலையை அடைவர்.

இதுவே சிவன் சொத்து குலநாசம் என்பதன் இரகசியம்..... பொருள்.... என்று இப்படியும் சிந்திக்கலாம்

ARUNACHALAM

# தினம் ஒரு தலைவர்கள் தாதா அமீர் ஹைதர் கான் வரலாறு

தாதா அமீர் ஹைதர் கான், 1900 - 1989) பிரித்தானிய இந்தியாவின் முதல் தலைமுறை பொதுவுடைமைத் தலைவர்களுள் ஒருவர். இந்திய விடுதலை இயக்கப் புரட்சியாளர்.

வாழ்க்கைச் சுருக்கம்
அமீர் ஐதர் கான் ராவல்பிண்டி மாவட்டத்திலிலுள்ள சியாகிலியான் உமர் கான் என்ற சிறு கிராமத்தில் எளிய பஞ்சாபி முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தை அமீர் ஹைதர்கான் சிறுவயதாக இருக்கும்போதே இறந்துவிட்டார். பின்னர் அவரது தாயார் இரண்டாம் திருமணம் செய்துகொள்கிறார். அவர் தன்னுடைய மாற்றாந் தந்தையிடம் பல கொடுமைகளை அனுபவித்தார் . ஆயினும் கல்வி கற்கும் தணியாத ஆவலால் அவர்வீட்டைவிட்டு வெளியேறி பல்வேறு சிரமங்களுக்கு ஆளானார். பின்னர் இவர் மதராசாவில் சேர்க்கப்பட்டார்.1914 ஆம் ஆண்டில் மும்பையில் பிரித்தானிய வணிகக் கப்பல் படையில் சேர்ந்தார். அங்கிருந்து அவர் 1918 இல் அமெரிக்க வாணிபக் கப்பல் படையில் இணைந்தார். இக்காலகட்டத்தில் அவர் யோசேப்பு முல்க்கேன் எனும் ஐரிய தேசியவாதியை சந்திக்க நேர்ந்தது. அவர் மூலம் பிரித்தானியருக்கு எதிரான அரசியல் கருத்துக்களை அறிந்து கொண்டார்.

சர்வதேச கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரதிநிதியாக உருசியாவில் சில காலம் செயல்பட்ட பின் இந்தியா திரும்பினார். இந்தியா திரும்பிய ஐதர் கானுக்கு தென்னிந்தியாவில் கட்சியை உருவாக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது. மீரட் சதி வழக்கில்





குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டிருந்ததால் தமிழகத்திலும் தலைமறைவாகத்தான் இவர் வாழ வேண்டியிருந்தது. சங்கர் எனும் புனை பெயரை வைத்துக்கொண்டு தமிழகம் மற்றும் தென்னிந்தியாவின் சாதிய அமைப்பை தெரியாமலும், எவரொருவர் உதவியின்றியும் சென்னை(மெட்ராஸ்) வந்து கம்யூனிஸ்டு கட்சியை கட்டும் பொறுப்பை ஏற்றார். அவ்வாறு தனித்து இருந்த போதும், இந்த முகம் தெரியாத ஊரில், மாத்யூஸ் என்ற ரயில்வேத் தொழிலாளியிடம் நட்பை ஏற்படுத்திக் கொண்டு தனது பணியைத் தொடங்குகிறார் கான்.

வாழ்க்கை வரலாறு
ஆமீர் ஹைதர்கானின் வாழ்க்கை வரலாற்றை அவரிடம் நேரிடையாகக் கேட்டுப் பெற்ற டாக்டர் அயூப் மிர்சா என்பவர் உருது மொழியில் எழுதிய வாழ் புனைகதையின் சுருக்கப் பட்ட ஆங்கிலப் பெயர்ப்பின் தமிழாக்கம் - "அமீர் ஹைதர்கான்: காவியம் படைத்த கம்யூனிஸ்ட்" என்கிற நூலை பாரதி புத்தகாலயம் வெளியிட்டுள்ளது.

PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
சென்னை சனிக்கிழமை 28.02.2026

## பண மோசடி வழக்குகளில் ப.சிதம்பரம் மீது நடவடிக்கை எடுக்க மத்திய அரசு அனுமதி

**புதுடெல்லி, பிப்.28:**

ஐஎன்எக்ஸ் மீடியா மற்றும் ஏர்செல் மேக்ஸிஸ் ஒப்பந்தத்தில் பணமுறைகேடு செய்த வழக்கில் முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் மீது நடவடிக்கை எடுக்க மத்திய அரசு அனுமதி வழங்கியது.

இந்த இரு வழக்குகளிலும் பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின்கீழ் (பிஎம்எல்ஏ) அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ள மத்திய அரசு பிறப்பித்த உத்தரவை தில்லி சிறப்பு நீதிமன்றத்திடம் வியாழக்கிழமை சமர்ப்பித்த அமலாக்கத்துறை விசாரணையை தீவிரப்படுத்த வலியுறுத்தியது. கடந்த 2006-07 காலகட்டத்தில் மத்திய நிதியமைச்சராக பதவி வகித்தபோது மலேசியாவைச் சேர்ந்த மேக்சிஸ் நிறுவனமானது ஏர்செல் நிறுவனத்தில் ரூ.3,500 கோடி முதலீடு செய்தது. இதே காலகட்டத்தில் ஐஎன்எக்ஸ் மீடியா குழுமம் வெளிநாட்டில் இருந்து ரூ.305 கோடி நிதியைப் பெற்றது. இந்த இரண்டு ஒப்பந்தங்களிலும் முறைகேடு நடைபெற்றாக முதலில் சிபிஐ வழக்குப்பதிவு செய்தது. அதனடிப்படையில் பிஎம்எல்ஏவின்கீழ் அமலாக்கத் துறையும் விசாரணை நடத்தியது. இந்த முறைகேடுகளில் ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரத்துக்கும் தொடர்பிருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்நிலையில், பொதுப் பணியில் உள்ளோர் மீது பிஎம்எல்ஏ, 2002-இன்கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய மத்திய அரசிடம் இருந்து முன் அனுமதி பெறுவது கட்டாயம் என உச்சநீதிமன்றம் 2024, நவம்பரில் தீர்ப்பளித்தது.

இதையடுத்து, ப.சிதம்பரம் மீது நடவடிக்கை எடுக்க மத்திய அரசிடம் அமலாக்கத் துறை அனுமதி கோரியது. கடந்த பிப்.10-ஆம் தேதி இதற்கான அனுமதியை மத்திய அரசு வழங்கியது. இந்த உத்தரவை தில்லி சிறப்பு நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அமலாக்கத் துறை, இரு வழக்குகளிலும் ப.சிதம்பரம் மீதான விசாரணையை தீவிரப்படுத்த வலியுறுத்தியது.

## உலகின் தலைவராக மாற காலனிய மனோபாவத்திலிருந்து வெளிவருவது அவசியம்: குடியரசு துணைத் தலைவர்

**புதுடெல்லி, பிப்.28:**



புத்தாக்க கண்டுபிடிப்பில் இந்தியா உலகின் தலைவராக மாறுவதற்கு, காலனிய மனோபாவத்தில் இருந்து நாடு வெளிவருவது அவசியம் என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஸ்ரீநகரில் உள்ள காஷ்மீர் பல்கலைக்கழகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு அவர் பேசியதாவது: சுதேசி கண்டுபிடிப்புகள் மீதும், தீர்வுகள் மீதும் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும். நாம் யாருக்கும் எதற்கும் குறைந்தவர்கள் என கவலையோ, தயக்கமோ கொள்ளத் தேவையில்லை. காலனிய மனோபாவத்தில் இருந்து முதலில் வெளிவந்தாலே போதும். நாட்டில் தொழில் துறையை மிகவும் துடிப்புமிக்கதாகவும், இதுவரை இல்லாத அளவு மிகவும் சாதகமானதாகவும் பிரதமர் மோடி மாற்றியுள்ளார்.

கரோனா காலத்தில் உள்நாட்டிலேயே தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்கும்படி நமது நாட்டு விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார். நம்மால் மருந்து கண்டுபிடிக்க முடியும் என அப்போது எத்தனை பேர் நம்பியிருப்பார்? ஆனால், நாம் சிறந்த கரோனா தடுப்பு மருந்தை கண்டுபிடித்தோம். அந்த மருந்து, ஒட்டுமொத்த மனிதகுலத்துக்கும் பயன் தந்தது. இதே மருந்தை உலகில் உள்ள வளர்ந்த நாடுகள் ஆய்வு செய்து உருவாக்கின. ஆனால், நமக்கு பிறகுதான் அவை கண்டுபிடிக்கப்பட்டன என்பதால் உரிமை கோர முடியவில்லை. அதனால் அதிக விலைக்கு அதை விற்றனர். ஒரு யூனிட் மருந்து 7,500 டாலருக்கு விற்கப்பட்டது. அதை எப்படி ஏழைகள் வாங்க முடியும்?

போதைப் பொருளில் இருந்து விலகியிருக்க வேண்டும்: அனைத்து மதங்களிலும், போதைப் பொருள்களை எடுத்து கொள்வது பாவச் செயல் எனக் கூறப்பட்டுள்ளது. ஆதலால் மாணவர்களாகிய நீங்கள் போதைப் பொருளைத் தவிர்க்க வேண்டும். வயதான காலத்தில் நீங்கள் கவனித்துக் கொள்வீர்கள் என உங்களின் பெற்றோர் நம்புகின்றனர். வாழ்க்கையில் நீங்கள் வெற்றி பெற வேண்டும் என உங்கள் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஆதலால் நீங்கள் மட்டுமன்றி, உங்களது நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தினமும் நீங்கள் சந்திக்கும் அனைவரிடமும் போதைப் பொருளில் இருந்து விலகியிருக்க நீங்கள் வலியுறுத்த வேண்டும்.

சமூகவலைதளங்களிலும் மாணவர்கள் கவனமுடன் இருக்க வேண்டும். மிகவும் கட்டுப்பாட்டுடன் அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்றார்.

## ஜார்க்கண்ட்: விபத்துக்குள்ளான ஏர் ஆம்புலன்ஸ்: 7 பேர் பலி

**ராஞ்சி, பிப்.28:**

ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சி அருகே விபத்துக்குள்ளான ஏர் ஆம்புலன்ஸ் 6,600 மணி நேரம் பறந்த 39 ஆண்டு கால பழைய விமானம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜார்க்கண்ட் ராஞ்சியில் உள்ள பிர்சா முண்டா விமான நிலையத்தில் இருந்து பிப்ரவரி 23ம் தேதி இரவு 7.11 மணி அளவில் நோயாளி மற்றும் அவரது குடும்பத்தினர் உட்பட 7 பேருடன் ஏர் ஆம்புலன்ஸ் விமானம் டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தை நோக்கி புறப்பட்டது.

இந்த விமானம் சத்ரா மாவட்டத்தில் உள்ள சிமாரியா காட்டுப் பகுதியில் விபத்துக்குள்ளாகி அதில் பயணம் செய்த 7 பேரும் உயிரிழந்தனர். இந்த ஏர் ஆம்புலன்ஸை விவேக் விகாஷ் பகத் என்ற விமானி இயக்கினார். துணை விமானியாக இருந்தவர் சவ்ராஜ் தீப் சிங். ரெட்பேர்ட் ஏர் வேஸ் இயக்கிய இந்த பீச்கிராப்ட் சி 90 ஏ விமானம் 1987-ல் தயாரிக்கப்பட்டது. இது 6,610 மணி நேரம் பறந்திருந்தாலும், புள்ளி விவரப்படி இது அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட விமானம் அல்ல என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விமானத்துக்கான தகுதிச் சான்றிதழ் இந்த ஆண்டு ஜனவரி 21-ல் புதுப்பிக்கப்பட்டது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## நாடு முழுவதும் ஏப்.1 முதல் 20 சதவீதம் எத்தனால் கலந்த பெட்ரோல் விற்பனை செய்வது கட்டாயம்: மத்திய அரசு

**புதுடெல்லி, பிப்.28:**

நாடு முழுவதும் ஏப்ரல் 1 முதல் 20% எத்தனால் கலந்த பெட்ரோல் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும் என மத்திய பெட்ரோலிய அமைச்சகம் அரசாணை வெளியிட்டுள்ளது. இது கச்சா எண்ணெய் இறக்குமதியைக் குறைக்கவும், சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் கட்டுப்படுத்தவும் அன்னியச் செலாவணியைச் சேமித்தல், உமிழ்வைக் குறைத்தல் மற்றும் விவசாயிகளுக்கு ஆதரவளிக்கவும் உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023-2025க்கு இடையில் தயாரிக்கப்பட்ட பெரும்பாலான வாகனங்கள் E20 பெட்ரோலில் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. எனினும், பழைய வாகனங்களின் மைலேஜில் சிறிது குறைவு ஏற்படலாம் எனவும் ரப்பர், பிளாஸ்டிக் பொருட்கள் தேய்ந்து போகலாம் எனவும் வாகன ஓட்டிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

## தில்லி பல்கலை. கல்லூரியில் புதிய மாணவர் வசதி மையம்: அடிக்கல் நாட்டினார் அமைச்சர் ஆஷிஷ் சூட்

**புதுடெல்லி, பிப்.28:**

டில்லி கல்வி அமைச்சர் ஆஷிஷ் சூட் மகாராஜா அகரசென் கல்லூரியில் புதிய மாணவர் வசதி மையத்தை வியாழக்கிழமை திறந்து வைத்து, இந்திய அறிவுப் பாரம்பரிய மையத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.


மேலும், பன்மாதிரி கருத்தரங்க மண்டபம், 5 நவீன 'ஸ்மார்ட்' வகுப்பறைகள் மற்றும் அலைவரிசை அடையாள முறையுடன் இயங்கும் நூலக மேலாண்மை அமைப்பையும் அவர் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வின்போது அவர் பேசியதாவது: உயர்கல்வித் துறையை கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டின் மூலம் வலுப்படுத்த தில்லி அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தலைநகரின் கல்வி அமைப்பை நவீன மையமாக மாற்றும் நோக்கில் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. புதிய மாணவர் வசதி மையம் மாணவர்களுக்கு சிறந்த கல்வி சூழலை உருவாக்கும். இந்திய அறிவுப் பாரம்பரிய மையம் இந்திய அறிவு மரபுகள், கலாசாரம் மற்றும் பாரம்பரிய ஆய்வுகளை ஊக்குவிக்கும்.

இதனால் கல்லூரிகளுக்கு நிதி பற்றாக்குறை ஏற்படாது என்றும் ஆசிரியர்களின் மரியாதை பாதிக்கப்படாது என்றும் நான் உறுதி அளிக்கிறேன். மேலும், 9 முதல் 12-ஆம் வகுப்பு வரை உள்ள 7,000 வகுப்பறைகளை நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகளாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. பள்ளிகள், கல்லூரிகள், தொழில்நுட்ப கல்வி நிலையங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்கள் அனைத்திலும் அமைப்புகளை வலுப்படுத்துவதே முக்கிய கவனமாக இருக்கும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

## மாநிலங்களவை தேர்தல்: சுயேச்சை மனு தாக்கல்

**புதுடெல்லி, பிப்.28:**



தமிழகத்தில் காலியாகவுள்ள 6 மாநிலங்களவை உறுப்பினர் பதவிகளுக்கான தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் வியாழக்கிழமை தொடங்கிய நிலையில், சுயேச்சை வேட்பாளர் மனு தாக்கல் செய்தார்.

மாநிலங்களவை உறுப்பினர்கள் மு.தம்பிதுரை, ஜி.கே.வாசன், என்.ஆர். இளங்கோ, கனிமொழி சோமு, திருச்சி சிவா, பி.செல்வராசு ஆகிய 6 பேரின் பதவிக்காலம் ஏப். 2-ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. இதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டு, வியாழக்கிழமை வேட்புமனு தாக்கல் தொடங்கியது. மார்ச் 5-ஆம் தேதி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம். மார்ச் 9-இல் வேட்புமனுக்களை திரும்பப் பெறலாம். தேவைப்பட்டால் மார்ச் 16-இல் வாக்குப்பதிவு நடைபெறும். வேட்புமனு தாக்கல் செய்ய முதல்நாளான வியாழக்கிழமை சேலத்தைச் சேர்ந்த பத்மராஜன் சுயேச்சையாக வேட்புமனு தாக்கல் செய்தார்.

மாநிலங்களவை உறுப்பினர் வேட்புமனுவில் 10 எம்எல்ஏ.க்கள் முன்மொழிவு கையொப்பம் பெற்றுதான் மனு தாக்கல் செய்ய வேண்டும். ஆனால், அவரது மனுவில் யாரும் முன்மொழியவில்லை. எனவே, மனு தள்ளுபடி செய்யப்படும்.

தற்போதுள்ள எம்எல்ஏ-க்களின் எண்ணிக்கை அடிப்படையில் திமுக சார்பில் 4 பேர், அதிமுக சார்பில் 2 பேர் மாநிலங்களவை உறுப்பினர்களாக தேர்வு செய்ய வாய்ப்புள்ளது.

## தேர்தல் ஆணையத்துக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்

**புதுடெல்லி, பிப்.28:**

காமன் காஸ் அமைப்பு தாக்கல் செய்த பொது நல மனுவை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூரியகாந்த் தலைமையிலான அமர்வு விசாரித்தது.

காமன் காஸ் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷண் கூறும்போது, "தேர்தலின்போது கட்சிகள் பண பலத்தை பயன்படுத்துவது ஜனநாயகத்தை பாதிக்கிறது. தேர்தல் செலவின கட்டுப்பாடுகள் இருந்தாலும் அது வேட்பாளருக்கு மட்டுமே பொருந்துவதாக உள்ளது" என்று வாதிட்டார். இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட உச்ச நீதிமன்றம், பொதுநல மனு குறித்து பதில் அளிக்க தேர்தல் ஆணையத்துக்கும், மத்திய அரசுக்கும் உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்துள்ளது.

## ரூ.6 கோடி உயர் ரக கஞ்சா பறிமுதல்: கேரள இளைஞர் கைது

**புதுடெல்லி, பிப்.28:**



சென்னை விமான நிலையத்தில் ரூ.6 கோடி உயர்ரக கஞ்சாவை சுங்கத் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து, கேரள மாநில இளைஞரைக் கைது செய்தனர்.

தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் இருந்து, ஏர் ஏசியா பயணிகள் விமானத்தில் புதன்கிழமை நள்ளிரவு சென்னை சர்வதேச விமான நிலையத்துக்கு வந்த பயணிகளை சுங்கத் துறை அதிகாரிகள் ரகசியமாக கண்காணித்தபோது, கேரளத்தைச் சேர்ந்த 25 வயது ஆண் பயணி மீது அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதையடுத்து அவரைத் தடுத்து நிறுத்தி விசாரித்தனர். அவரை சுங்கத்றை அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று உமைமைகளையும் சோதனையிட்டனர்.

இதில், அவரது பெட்டிக்குள் ரூ.6 கோடி மதிப்பிலான 5.9 கிலோ உயர்ரக ஹைட்ரோபோனிக் கஞ்சா இருந்தது தெரிய வந்தது. இதையடுத்து சுங்க அதிகாரிகள் அந்த இளைஞரை கைது செய்ததுடன், உயர்ரக கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

விசாரணையில், படிப்புக்குத் தகுந்த வேலை இல்லாததால், கடத்தலில் ஈடுபட்டு முதல்முறையே சிக்கியது தெரிய வந்தது.

## சிறைகளில் காலிப் பணியிடங்களை நிரப்ப நெறிமுறை: மாநிலங்களுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு



**புதுடெல்லி, பிப்.28:**

நன்னடத்தை உடைய கைதிகள், குறைந்த அளவு கண்காணிப்புடன் இருக்கும் இடமே திறந்தவெளி சிறைச்சாலையாகும். இங்குள்ள கைதிகளுக்கு வாழ்வாதாரத்துக்காக பகல் நேரத்தில் வெளியில் விவசாயம் போன்ற வேலைக்குச் சென்றுவிட்டு, இரவு நேரத்தில் மீண்டும் சிறைக்கு திரும்பி வரும் சலுகை வழங்கப்படுகிறது. சமுதாயத்தில் கைதிகளுக்கு தொடர்புகளை ஏற்படுத்தவும், வெளிவாழ்க்கையில் மனரீதியில் கைதிகளுக்கு ஏற்படுத்தும் அழுத்தத்தை குறைக்கும் வகையிலும் இந்த சிறைச்சாலை அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த சிறைச்சாலை தொடர்பான பொதுநல மனு, உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோரைக் கொண்ட அமர்வு முன்பு வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு:

சிறைச்சாலைகள் என்பது தவறுகளை கைதிகள் திருத்திக் கொள்ளும் இடமாகும். அந்த இடம் கண்ணியம், சுய மரியாதை, சமூக மறு ஒருங்கிணைப்பு ஆகியவற்றை ஏற்படுத்தும் இடமாக இருக்க வேண்டும். இதை கண்காணிக்கும் குழுக்களை அமைப்பது தொடர்பான நெறிமுறையை மாநில அரசுகள், யூனியன் பிரதேச அரசுகள் 3 மாதங்களில் தாக்கல் செய்ய வேண்டும்.

அதேபோல், திறந்தவெளி சிறைகள் தொழிலாளர் முகாமாக மட்டும் செயல்படக்கூடாது. இதை மாநில அரசுகளும், யூனியன் பிரதேச அரசுகளும் உறுதிப்படுத்த வேண்டும். அந்த சிறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை 2 மாதங்களுக்குள் நிரப்புவதையும் மாநில, யூனியன் பிரதேச அரசுகள் உறுதிப்படுத்த வேண்டும். நீதிமன்ற உத்தரவு செயல்படுத்தப்பட்டது தொடர்பான அறிக்கையை, அது செயல்படுத்தப்பட்ட ஒரு மாதத்துக்குள் கண்காணிப்புக் குழுவிடம் மாநில, யூனியன் பிரதேச அரசுகள் தாக்கல் செய்ய வேண்டும். இதேபோல் பெண் கைதிகள் எண்ணிக்கைக்கு ஏற்ப இடவசதி இருக்கும் வகையில் திறந்தவெளி சிறைச்சாலைகளை சீரமைப்பது தொடர்பான நெறிமுறையையும் மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் உருவாக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

## 'ஆங்கிலேயருக்கே கடன் கொடுத்த பரம்பரை நாங்க' - 109 ஆண்டுகளுக்கு பிறகு வட்டியும் முதலுமாக திருப்பி கேட்க வாரிசுகள் முடிவு!

**போபால், பிப்.28:**

இந்தியாவை சுமார் 200 ஆண்டுகள் ஆட்சி செய்து வந்த ஆங்கிலேயர்கள், 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் 14-ந்தேதி இரவு நாட்டைவிட்டு வெளியேறினர். அதனைத் தொடர்ந்து, ஆகஸ்ட் 15-ந்தேதி இந்தியா சுதந்திரம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆங்கிலேய அரசு இந்தியாவை ஆட்சி செய்த காலத்தில், முதலாம் உலகப்போரின்போது ஏற்பட்ட நிதி நெருக்கடி சமயத்தில், 1917-ம் ஆண்டு மத்திய பிரதேசம் மாநிலம் சீஹோர் பகுதியைசேர்ந்த தொழிலதிபர் சேத் ஜூம்மாலால் ருதியா என்பவரிடம் ரூ.35 ஆயிரம் கடன் வாங்கியுள்ளது.

ஆங்கிலேய அரசுக்குகடன் கொடுத்த தகவல் ருதியாவின் மகன் உள்ளிட்டோருக்கு அப்போது தெரிந்திருந்தும், அதற்கான உரிய ஆவணங்கள் இல்லாததால் சுதந்திரத்திற்கு பிறகு அந்த பணத்தை திருப்பி பெறுவதற்கான எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை. இந்த நிலையில், 109 ஆண்டுகளுக்கு பிறகு ஜூம்மாலால் ருதியாவின் பேரன் விவேக், வீட்டில் இருந்த பழைய உயில்கள், ஆவணங்களை ஆய்வு செய்திருக்கிறார். அப்போது அவருக்கு ஆச்சரியம் அளிக்கும் வகையில், தனது தாத்தா, ஆங்கிலேய அரசுக்கு ரூ.35 ஆயிரம் கடன் வழங்கியது தொடர்பான அசல் பத்திரம் மற்றும் ஆவணம் கிடைத்துள்ளது.

அந்த ஆவணத்தில், முதல் உலகப்போரின்போது ஏற்பட்ட நிதி நெருக்கடியில், சீஹோர் சமஸ்தான தேவைக்காக 1917-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ந்தேதி ரூ.35 ஆயிரம் கடன் வாங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது அப்போதைய காலத்தில், போர்க்கடன் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. 100 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.35 ஆயிரம் என்பது மிகப்பெரிய தொகை. இன்றைய காலத்தில் கோடிகளுக்கு சமம். தற்போது, வட்டியுடன் சேர்த்தால் இந்த தொகை ரூ.12 கோடிக்கு மேல் வரும் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், அந்த பணத்தை ஆங்கிலேய அரசு இதுவரை திருப்பி தராததால், கடனை திருப்பிக்கேட்க விவேக் மற்றும் அவரது குடும்பத்தினர் முடிவு செய்துள்ளனர். இதுதொடர்பாக, தற்போதைய பிரிட்டன் அரசுக்கு சட்டப்பூர்வ நோட்டீஸ் அனுப்பவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

## பிஎஸ்என்எல் இயக்குநர் வீண் செலவுடன் பயணிக்கத் திட்டம்: மத்திய அமைச்சர் கண்டனம்

**புதுடெல்லி, பிப்.28:**

உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜுக்கு பிஎஸ்என்எல் இயக்குநர் விவேக் பன்சால் 2 நாள் பயணம் (பிப்.25, 26) மேற்கொள்ளத் திட்டமிட்டார். இந்தப் பயணத்தில் அங்குள்ள திரிவேணி சங்கமத்தில் நீராடல், படகு சவாரி செய்வது, படே ஹனுமான், அக்ஷயாவத் மற்றும் பாதால்புரி கோயில்களுக்குச் செல்வது என்று திட்டமிடப்பட்டது. இதற்கான போக்குவரத்து, தங்குமிடம் என பயணத்துக்கான ஒவ்வொரு ஏற்பாட்டையும் செய்யும் பணி 50 அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்டது. இதுதவிர ஹோட்டல், சுற்றுலா மாளிகை, உலர் பழங்கள், முகச்சவரம் செய்யும் கருவிகள், துண்டு, உள்ளாடைகள், காலணிகள், கண்ணாடிகள், சோப்பு, ஷாம்பு, எண்ணெய், படுக்கை விரிப்பு உள்ளிட்டவற்றை ஏற்பாடு செய்யவும் அலுவலக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனால் சர்ச்சை ஏற்பட்ட நிலையில், பன்சாலின் பயணம் ரத்து செய்யப்பட்டு அலுவல்பூர்வ விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதுகுறித்து புது டில்லியில் மத்திய அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா புதன்கிழமை கூறுகையில், 'பிஎஸ்என்எல் இயக்குநர் பன்சாலின் பிரயாக்ராஜ் பயணத்துக்கு முன்வைக்கப்பட்ட தேவைகள் மற்றும் ஏற்பாடுகள் அபத்தமானவை. இது அதிர்ச்சியளிக்கிறது. இந்தத் தேவைகள் மற்றும் ஏற்பாடுகளைக் கோரி, பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ஏற்கத்தக்கது அல்ல. விதிமுறைகளை மீறியதால் பன்சாலிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது' என்றார்.

## விமான பயணச் சீட்டு கட்டணம் திரும்பபெறும் நடைமுறையில் டிஜிசிஏ திருத்தம்

**புதுடெல்லி, பிப்.28:**

விமான பயணச் சீட்டை குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு முன்பதிவு செய்த 48 மணி நேரத்துக்குள் கூடுதல் கட்டணங்கள் ஏதுமின்றி ரத்து செய்யும் வகையில் விமான பயணச் சீட்டு கட்டணம் திரும்பப் பெறும் நடைமுறையில் திருத்தத்தை விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) மேற்கொண்டுள்ளது. ரத்து செய்யப்படும் பயணச் சீட்டுகளுக்கான கட்டணத் தொகை திரும்ப அளிப்பதற்கான நடைமுறையை விமான நிறுவனங்கள் 14 வேலை நாள்களுக்குள் நிறைவு செய்ய வேண்டும் என்றும் டிஜிசிஏ அறிவுறுத்தியுள்ளது.

ரத்து செய்த விமான பயணச் சீட்டுகளுக்கான கட்டணத் தொகையை திரும்ப அளிக்க விமான நிறுவனங்கள் நீண்ட தாமதம் செய்வதாக எழுந்த தொடர் புகார்களைத் தொடர்ந்து, இந்த நடைமுறையில் திருத்தங்களை டிஜிசிஏ மேற்கொண்டுள்ளது.




## சென்னை விமான நிலையத்தில் ரூ.6 கோடி மதிப்பிலான ஹைட்ரோபோனிக் கஞ்சா பறிமுதல்

**சென்னை, பிப்.28:** சென்னைக்கு விமானம் மூலம் கடத்தி வரப்பட்ட ரூ.6 கோடி மதிப்பிலான உயர்தர ஹைட்ரோபோனிக் கஞ்சாவை சுங்கத் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக கேரளாவைச் சேர்ந்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

தாய்லாந்தின் பாங்காக்கிலிருந்து நேற்று முன்தினம் இரவு சென்னைக்கு ஏர் ஏசியா விமானத்தில் வந்த பயணிகளை சுங்கத் துறை ஏர் இன்டெலி ஜென்ட் அதிகாரிகள் கண்காணித்தனர். அப்போது, ஓர் இளைஞரை சந்தேகத்தின்பேரில் தடுத்து நிறுத்தி விசாரித்தனர்.

அந்த இளைஞர் முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்ததால், அவரது உடைமைகளை சோதனையிட்டனர். அவரது சூட்கேஸைத் திறந்து பார்த்தபோது, அதில் பாலிதீன் கவர்களால் சுற்றப்பட்டிருந்த 15 பார்சல்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அவற்றை பிரித்துப் பார்த்தபோது, அதில் 5.9 கிலோ எடையுள்ள உயர்தர ஹைட்ரோபோனிக் கஞ்சா இருந்தது தெரியவந்தது. இதுகுறித்து, இளைஞரிடம் நடத்திய விசாரணையில், அவர் கேரளாவைச் சேர்ந்தவர் என்பதும்,பணத்துக்காக குருவியாக செயல்பட்டதும் தெரியவந்தது.

மேலும், இந்த கஞ்சாவை பெற்றுக்கொள்ள விமான நிலையத்துக்கு வெளியே தயாராக ஒருவர் காத்திருப்பதாகவும், அவரிடம் இந்த கஞ்சா பொட்டலங்களை ஒப்படைக்க இருப்பதாகவும் அந்த இளைஞர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து விசாரணை: இதையடுத்து விமான நிலையத்துக்கு வெளியே காத்திருக்கும் அந்த நபரைப் பிடிக்க அதிகாரிகள் விரைந்தனர். அதற்குள் கேரள இளைஞர் பிடிபட்ட தகவலறிந்த அந்த நபர் அங்கிருந்து தப்பிச் சென்றார்.

தற்போது கைது செய்யப்பட்டுள்ள இளைஞரிடம் சுங்கத்துறை அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவின் சர்வதேச மதிப்பு ரூ.6 கோடி எனவும், பிடிபட்ட இளைஞர் இப்போதுதான் முதல் முறையாக குருவியாக செயல்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சென்னை | கஞ்சா விற்பனை வழக்கில் அதிமுக பிரமுகர் மகன் கைது

**சென்னை, பிப்.28:** சென்னை போரூர் மாதனாங்குப்பம், அன்னை வேளாங்கண்ணி நகரில் உள்ள ஒரு வீட்டில் உயர் ரக கஞ்சா பதுக்கி வைத்து விற்பனை செய்யப்பட்டு வருவதாக சென்னை போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவு போலீஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, போலீஸார் சம்பந்தப்பட்ட வீட்டில் நுழைந்து சோதனை நடத்தி, அங்கு பதுக்கி வைத்திருந்த 700 கிராம் ஒஜி வகையான உயர் ரக கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பாக, பூந்தமல்லியை அடுத்த செம்பரம்பாக்கத்தைச் சேர்ந்த சுனில் (21), அவரது நண்பர்களான கோவூரைச் சேர்ந்த வருண் (23), அய்யப்பன் தாங்கலைச் சேர்ந்த விஸ்வேஸ் (22) ஆகிய 3 பேரை கைது செய்தனர்.

சுனிலின் தந்தை கபிலன் அதிமுகவில் திருவள்ளூர் மாவட்ட ஒன்றிய இளைஞரணி துணைச் செயலாளராக பதவி வகித்து வருவதாக போலீஸார் தெரிவித்தனர். இவர்களது பின்னணி மற்றும் கூட்டாளிகள் குறித்து போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

## சவுகார்பேட்டை நகைப்பட்டறையில் காஸ் சிலிண்டர் வெடித்து தீ விபத்தில் உரிமையாளர் உயிரிழப்பு: 6 பேருக்கு தொடர் சிகிச்சை

**சென்னை, பிப்.28:** நகைப்பட்டறையில் காஸ் சிலிண்டர் வெடித்து ஏற்பட்ட தீ விபத்து சிக்கி உரிமையாளர் உயிரிழந்துள்ளார். ஊழியர்கள் 6 பேர் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சென்னை சவுகார்பேட்டை, சிங்கண்ணன் தெருவில், 4 மாடிக் கட்டிடத்தில் நகைப்பட்டறை ஒன்று செயல்பட்டு வருகிறது. மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவைச் சேர்ந்த சுமன் பால் பி சோகித் (35) என்பவர் இந்த நகைப்பட்டறையை நடத்தி வருகிறார்.

இவருக்கு திருமணமாகி பாயல்பாகு என்ற மனைவியும், 4 வயதில்பெண் குழந்தையும் உள்ளனர். இந்த பட்டறையில் வடமாநிலத்தைச் சேர்ந்த சிலர் தங்கி வேலை செய்து வருகின்றனர்.

இங்கு பழைய மற்றும் புதிய தங்கத்தை உருக்கி புதிய நகைகள் தயாரித்து சென்னையில் உள்ள பிரபல நகைக் கடைகளுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் 4-வது மாடியில் உள்ள நகைப்பட்டறையில் ஊழியர்கள் வழக்கம்போல் நகைகளை உருக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக அங்கிருந்த சிலிண்டரில் காஸ் கசிவு ஏற்பட்டு தீ விபத்து ஏற்பட்டது. சிறிது நேரத்தில் அடுத்தடுத்து 2 சிலிண்டர்கள் வெடித்து சிதறின. இதில் ஏற்பட்ட தீ விபத்தில் கட்டிடத்தின் ஒரு பகுதி இடிந்து ஊழியர்கள் 7 பேர் தீயில் சிக்கி படுகாயமடைந்தனர்.

தீயணைப்புத் துறையினருக்கு தகவல் கிடைத்ததையடுத்து, அவர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தண்ணீரைப் பீய்ச்சி அடித்து தீயை முழுமையாக அணைத்தனர்.

இந்த விபத்தில் சிக்கிய நகைப்பட்டறை உரிமையாளர் சுமன் பால் பி சோகித் உட்பட 7 பேரை தீயணைப்பு வீரர்கள் மற்றும் காவல் துறையினர் மீட்டு சிகிச்சைக்காக ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு அனைவருக்கும் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நகைப்பட்டறை உரிமையாளர் உயிரிழந்தார்.


மேலும் நகைப்பட்டறை ஊழியர்களான மேற்குவங்கத்தைச் சேர்ந்த அரவிந்த் தாக்கல் (27), ஜாந்தோ இந்திரஜித் (40), சிமந்தோமால் (47), ராகேஷ் டேலி (26), ஆனந்து (32), சூரஜ் (25) ஆகியோர் 70 சதவீத தீக்காயங்களுடன் கவலைக்கிடமான நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்து குறித்து யானைக்கவுனி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

## தாயமங்கலம் முத்து மாரியம்மன் கோவிலில் புதிய அன்னதான கூடம் அடிக்கல் பூஜை

### தமிழக முதல்வர் முக.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

**மானாமதுரை, பிப்.28:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள தென்மாவட்டங்களில் பிரசித்தி பெற்ற தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோவில் வளாகத்தில் தமிழக இந்து சமய அறநிலைத்துறை சார்பில் ரூ1.6 கோடி செலவில் புதிதாக அன்னதான கூடம் கட்ட நேற்று அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.





மானாமதுரை எம்.எல்.ஏ., தமிழரசி, உதவி ஆணையாளர் திவ்யபாரதி, பரம்பரை அறங்காவலர் வெங்கடேசன் செட்டியார், ஆய்வாளர் அய்யனார், கண்ணமங்கலம் கூட்டுறவு சங்க தலைவர் தமிழரசன் மற்றும் கோவில் பணியாளர்கள், பக்தர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக கோவில் வளாகத்தில் 5.56.80 லட்சம் செலவில் கட்டப்பட்ட மண்டபத்தை தமிழக முதல்வர் முக ஸ்டாலினால் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

## பழனி கணக்கன்பட்டியில் ஓம் சற்குரு பழனி சுவாமிகளின் 12-ஆம் ஆண்டு மஹா குருபூஜை பெருவிழா

### பக்தர்கள் திரண்டு வழிபாடு செய்தனர்

**பழனி, பிப்.28:** திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள கணக்கன்பட்டி சற்குரு பீடத்தில் பக்தர்களால் பெரிதும் போற்றப்படும் ஓம் ஸ்ரீ சத்குரு பழனி சுவாமிகளின் 12-ஆம் ஆண்டு மஹா குருபூஜை பெருவிழா நேற்று வெள்ளிக்கிழமை தொடங்கி 28 ந்தேதி சனிக்கிழமை வரை விமரிசையாக நடைபெறுகிறது.



ஒவ்வொரு ஆண்டும் சற்குரு பழனி சுவாமிகளின் குருபூஜை விழா பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சூழ நடைபெறுவது வழக்கம். அந்த வகையில், இந்த ஆண்டு 12-ஆம் ஆண்டு விழாவாக இது கொண்டாடப்படுகிறது. கணக்கன்பட்டி சித்தரின் அருளாசி பெறத் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், அண்டை மாநிலங்களிலிருந்தும் பக்தர்கள் திரளாக வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆன்மீக அதிர்வுகள் நிறைந்த இந்த குருபூஜை விழாவில் கலந்து கொண்டு குருவருளும், திருவருளும் பெற அன்புடன் அழைக்கப்படுகிறார்கள். நேற்றுஅதிகாலை சிறப்பு கோபூஜை தொடர்ந்து மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் முற்றோதல் நிகழ்ச்சியுடன் தொடங்கியது. காலை 08:30 குருபூஜை பெருவிழா கொடியேற்றம் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.


தொடர்ந்து காலை 09:00 குருபூஜை வேள்விக்கு தீர்த்த கலசம் எடுக்க கோம்பைப்பட்டி ஜக்கம்மாள் கோவிலுக்கு புறப்பட்டு தீர்த்தம் எடுத்து வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. மதியம் சிறப்பு குருபூஜை வழிபாடு அதைத் தொடர்ந்து பக்தி இன்னிசை மற்றும் பரத நாட்டிய கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இன்று சனிக்கிழமை அதிகாலை 3:00 சித்தர்முறை வேள்வி பூஜை, பக்தி இன்னிசை ' சிறப்பு ஆன்மிகச் சொற்பொழிவுகள் நடைபெற்றது.சற்குருவுடன் எனது அனுபவங்கள் தலைப்புடன் ஆன்மிக சொற்பொழிவு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து தீபாராதனை, மாகேஸ்வர பூஜை சிறப்பு அன்னதானம் நடைபெற்றது. இரண்டு நாட்கள் சற்குரு தவத்திரு கணக்கன்பட்டி பழனி சுவாமி குருபூஜை விழாவில் தமிழகத்தில் உள்ள அனைத்து ஊர்களிலுருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை பழனி கணக்கன்பட்டி மோகன் தோட்டம் ஓம் ஸ்ரீ சற்குரு பழனி சாமி அறக்கட்டளை சார்பில் செய்யப்பட்டு உள்ளது.



▶ திருப்பத்தூர் மாவட்டம் அம்பலூர் ஊராட்சியில் ஊராட்சி பொதுநிதியில் ரூபாய் 8,61,000 திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பல் பொருள் கட்டிடத்தை (MULTI PURPOSE SHED) ஊராட்சி மன்ற தலைவர் .A.P.முருகேசன் திறந்து வைத்தார் இதில் துணைதலைவர் நர்மதாநந்தகோபால் ஊர் முக்கியஸ்தர்கள் J.ஜனார்த்தனன், J.தேவேந்திரன்,K.தண்டபாணி, A.C.இரவி,D.துளசிராமன்,M.இந்துமதி,S.கங்காதரன்,S.சண்முகசுந்தரம்,R.திருமால், S.குமரேசன்,வார்டு உறுப்பினர்கள் V.செல்வநாயகி,R.குமாரி,R.சபிதா,C.பத்மா,P.பார்வதி G.பத்மநாபன் மற்றும் ஒப்பந்ததாரர் வேணு அரவிந்தன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## கூடலழகர் கண்ணாடி அறை தரிசனம்




கூடலழகர் கண்ணாடி அறை தரிசனம்.
வருடத்தில் இருமுறை மட்டுமே நடத்தப்படும் உற்சவம்.



மன்னார்கோயில் (அம்பாசமுத்திரம்) ராஜகோபாலசுவாமி.
குலசேகர ஆழ்வார் திருவரசு ஸ்தலம். பவித்ரோத்ஸவம்.



பெருமாள் தென்னேரி மண்டபத்தில் இறங்குதல்
திரும்புகால் 4 15 AM தென்னேரி_தெப்பம்




யக்ஞவராஹப் பெருமாள் ஸ்ரீமுஷ்ணத்தின் கருட
சேவை

## தமிழர் முன்னேற்ற பேரவை சார்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் நல்லகண்ணு மறைவிற்கு அஞ்சலி



**மயிலாடுதுறை, பிப்.28:** மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் ஒன்றிய தமிழர் முன்னேற்றப் பேரவையின் ஆலோசனைக் கூட்டம் வழுவூரில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு குத்தாலம் ஒன்றிய செயலாளர் ஐயா பிள்ளை தலைமை தாங்கினார்.

முன்னதாக ஒன்றிய தலைவர் பேராசிரியர் நேதாஜி அனைவரையும் வரவேற்று பேசினார். தமிழர் முன்னேற்றப் பேரவையின் மாநில தகவல் தொழில் நுட்ப அணி தலைவர் பார்த்திபன் கணேசன், மாநில கொள்கை பரப்பு செயலாளர் பெனாசிர் பேகம் ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர்.

கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக மாநில கொள்கை பரப்பு துணை செயலாளரும் தலைமை நிலைய ஆலோசக குழு தலைவருமான கவிஞர் பாலை மதியழகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் ஒன்றிய துணை செயலாளர்கள் குருமூர்த்தி , ராஜகுரு ஒன்றிய துணைத் தலைவர்கள் ராஜேந்திரன், பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் மறைந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் நல்ல கண்ணு மறைவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும் குத்தாலம் ஒன்றியத்தில் விவசாயிகளின் துயரை துடைக்கும் வகையில் அரிசி தொழிற்சாலை ஒன்று நிறுவ வேண்டும் என தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது மகளிர்க்கு ஊக்கத் தொகை வழங்கிய தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. நிறைவாக குத்தால ஒன்றிய துணைச் செயலாளர் மெல்கியோன் நன்றி கூறினார்.



▶ வடசென்னை கிழக்கு மாவட்டம் மனித உரிமை மாவட்டதலைவர் திரு அப்துல் சமத் அவர்களது பிறந்தநாள் அன்று டிஜிட்டல் பேனர் வைக்கப்பட்டது அந்த பேனரை சில சமூக விரோதிகள் கிழித்து விட்டனர் அதை ஒட்டி மாவட்ட தலைவர் மாதர் அம்ம கனி மற்றும் டிவி துரைராஜ் முன்னாள் மாவட்ட தலைவர் உத்தரவின் பெயரில் திரு மோகன் குமார் திரு வால் டாக்ஸி ரோடு ரமேஷ் சர்க்கிள் திரு தீபக் இளைஞர் காங்கிரஸ் மாவட்ட தலைவர் தலைவர் மாவட்ட வட்ட நிர்வாகிகள் அனைவரும் சேர்ந்து எச் 5 காவல் நிலையத்தில் ஆய்வாளரிடம் புகார் மனுவை அளித்தோம்.

## திசையன்விளை நாட்டு நலப்பணித் திட்டச் சிறப்பு முகாம் நான்காம் நாள்

### தென்மண்டல இயக்குநர் பங்கேற்பு



திசையன்விளையில் அமைந்துள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலகு 184 சார்பில் நடைபெற்று வரும் ஏழுநாள் சிறப்பு முகாம் நான்காம் நாளை சிறப்பாக எட்டியது.

இந்நிகழ்வில் நாட்டு நலப்பணித்திட்ட தென்மண்டல இயக்குநர்முனைவர் சாமுவேல் செல்லையா அவர்கள் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். மேலும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ வெளியப்பன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் பலவேச கிருஷ்ணன் அவர்கள் வரவேற்புரை வழங்கி, முகாமின் நோக்கமும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சமூகச் செயல்பாடுகளும் குறித்து விளக்கினார். தொடர்ந்து, தென்மண்டல இயக்குநர் முனைவர் சாமுவேல் செல்லையா அவர்கள் தன்னார்வ மாணவர்களைப் பாராட்டி உரையாற்றினார். சமூகச் சேவையின் அவசியத்தையும் இளைஞர்கள் நாட்டின் முன்னேற்றத்தில் வகிக்கும் பொறுப்பையும் அவர் வலியுறுத்தினார்.

முகாமின் ஒரு பகுதியாக கிராமச் சுத்தம், சுகாதார விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் தொடர்பு போன்ற பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மாணவர்களின் ஒழுக்கம், ஒற்றுமை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வு சிறப்பு விருந்தினர்களால் பாராட்டப்பட்டது. வணிகவியல் துறைத் தலைவர் ஒயிட்டன் சகாயராஜ் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

தமிழ் துறைப் பேராசிரியர் ராமபாண்டி, ஊர் பொதுமக்கள், நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வ மாணவர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

## திசையன்விளை நாட்டு நலப்பணித் திட்டச் சிறப்பு முகாம்




திசையன்விளை நாட்டு நலப்பணித் திட்டச் சிறப்பு முகாம் நான்காம் நாள் தென்மண்டல இயக்குநர் பங்கேற்பு திசையன்விளையில் அமைந்துள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலகு 184 சார்பில் நடைபெற்று வரும் ஏழுநாள் சிறப்பு முகாம் நான்காம் நாளை சிறப்பாக எட்டியது.

இந்நிகழ்வில் நாட்டு நலப்பணித்திட்ட தென்மண்டல இயக்குநர்முனைவர் சாமுவேல் செல்லையா அவர்கள் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார்.

மேலும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ வெளியப்பன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் பலவேச கிருஷ்ணன் அவர்கள் வரவேற்புரை வழங்கி, முகாமின் நோக்கமும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சமூகச் செயல்பாடுகளும் குறித்து விளக்கினார்.

தொடர்ந்து, தென்மண்டல இயக்குநர் முனைவர் சாமுவேல் செல்லையா அவர்கள் தன்னார்வ மாணவர்களைப் பாராட்டி உரையாற்றினார்.


சமூகச் சேவையின் அவசியத்தையும் இளைஞர்கள் நாட்டின் முன்னேற்றத்தில் வகிக்கும் பொறுப்பையும் அவர் வலியுறுத்தினார். முகாமின் ஒரு பகுதியாக கிராமச் சுத்தம், சுகாதார விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் தொடர்பு போன்ற பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாணவர்களின் ஒழுக்கம், ஒற்றுமை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வு சிறப்பு விருந்தினர்களால் பாராட்டப்பட்டது.

வணிகவியல் துறைத் தலைவர் ஒயிட்டன் சகாயராஜ் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

தமிழ் துறைப் பேராசிரியர் ராமபாண்டி, ஊர் பொதுமக்கள், நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வ மாணவர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.



ஸ்ரீ பார்த்தசாரதி பெருமாள் உடன் ஸ்ரீ குலசேகர ஆழ்வார் தவன உட்சவம் சாற்றுமுறை புறப்பாடு ஆரம்பம்.

## எல்.கே.பி. நகர் அரசு நடுநிலைப் பள்ளியில் ஆண்டுவிழா



**மதுரை, பிப்.28:** மதுரை மாவட்டம் மதுரை கிழக்கு ஒன்றியம் எல் கே பி நகர் அரசு நடுநிலைப் பள்ளியில் ஆண்டு விழா தலைமை ஆசிரியர் தென்னவன் தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர் ராஜவடிவேல் முன்னிலை வகித்தார். ஆசிரியை விஜயலட்சுமி வரவேற்றார். ஆசிரியை சித்ரா ஆண்டறிக்கை வாசித்தார்.

குழந்தைகளின் பறை இசை, சிலம்பம், கவிதை, நடனம், பாடல், நாடகம், ஆங்கில உரை, பழமொழி சண்டை, திருக்குறள் ஒப்புவித்தல், ஓவியம், கைவினைப் பொருட்கள் காட்சி, கிராமிய நடனம், மேற்கத்திய நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாவில் மதுரை கிழக்கு வட்டாரக் கல்வி அலுவலர் மணிமாறன், ஆசிரியர் பயிற்சிநர் சிவ பார்வதி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நாகலட்சுமி, துணைத் தலைவர் முருகன், வார்டு உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், பெற்றோர்கள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்கள், புதிய பாரத எழுத்தறிவு திட்ட தன்னார்வலர்கள், முன்னாள் மாணவர்கள், ஊர் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

நன்கொடையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். ஆசிரியைகள் அருவகம், சுமதி ஆகியோர் தொகுத்து வழங்கினர். ஆசிரியை அனுசியா நன்றி கூறினார். விழாவிற்கான ஏற்பாடுகளை ஆசிரியர் சுகுமாறன், தமிழ்ச்செல்வி, அகிலா, அம்பிகா, ராணி ஆகியோர் செய்திருந்தனர்.




## “ஓபிஎஸ்... சுயநலத்தின் மொத்த உருவம்!” - கே.பி.முனுசாமி காட்டம்



**கிருஷ்ணகிரி, பிப்.28:** சுயநலத்தின் மொத்த உருவமாக உள்ள ஓபிஎஸ், திமுகவில் இணைந்தது வெட்ககேடானது என அதிமுக துணை பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி எம்எல்ஏ தெரிவித்தார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாளையொட்டி, கிருஷ்ணகிரி அரசு மருத்துமவனையில் கடந்த 24-ம் தேதி பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில் பங்கேற்ற அக்கட்சியின் துணை பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி எம்எல்ஏ பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: “அதிமுக ஆட்சியில் 3 முறை முதல்வராக இருந்தவர் ஓ.பன்னீர்செல்வம். அந்த இயக்கத்தில் இருந்து தனக்கென அடையாளத்தை காட்டியவர்.

ஆனால், இன்றோ அதிமுக எதனால் உருவானதோ, இந்த இயக்கத்தின் தலைவர் எம்ஜிஆர் யாரை தீயசக்தி என கூறினாரோ, அவர்களிடம் ஓபிஎஸ் சேர்ந்துள்ளார். இது ஒரு வெட்ககேடான விஷயம். அவரை மனிதராக பார்ப்பதற்ககே வெட்கமாக உள்ளது. ஓபிஎஸ் 3 முறை முதல்வராக இருந்தது கசப்பான நினைவா? சுயநலத்தின் மொத்த உருவம் அவர். கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்கள் மன்னிப்புக் கடிதம் கொடுத்து தன்னை கட்சியில் சேர்த்துக் கொள்ளுங்கள் என கேட்க வேண்டும். அதுதான் அதிமுகவின் நடைமுறை.

கட்சியை களங்கப்படுத்த நினைக்கும் ஓபிஎஸ்ஸை வெளியேற்ற வேண்டும் என தொண்டர்கள் தீர்மானம் நிறைவேற்றி அதன் மூலம் வெளியேற்றப்பட்டவர். இணைப்பு என கூறிக் கொண்டு கட்சி தொண்டர்கள், மக்களை மட்டுமல்ல, தன்னையும் அவர் ஏமாற்றிக் கொண்டார்.

ஜெயலலிதா மறைவுக்குப் பின் முதல்வராக இருந்த ஓ.பன்னீர்செல்வத்திடம், சசிகலா ஏன் ராஜினாமா கடிதத்தை வாங்கினார்? ஜெயலலிதா போல் தன்னை உருவகப்படுத்திக் கொண்டு அவரது காரில் பவனி வந்து தன்னை முதல்வராகிக்கொள்ள எல்லா பணிகளையும் செய்தார். ஆனால், தர்மம் அதை விடுமா? சசிகலாவை எதிர்த்துதான் ஓபிஎஸ் தர்மயுத்தம் நடத்தினார்.

ஜெயலலிதா இறப்பில் மர்மம் இருக்கிறது. அதற்கு நீதி விசாரணை வேண்டும் என மேடைகளில் பேசினார். ஆனால், திடீரென சசிகலாவை சேர்க்க வேண்டும் என கோரிக்கை வைக்கிறார். யாரை இந்த இயக்கத்தில் இணைக்கக் கூடாது என கூறினோமோ, அவர்களையே இந்த இயக்கத்தில் சேர்க்க வேண்டும் என முயற்சி செய்பவர்களை எப்படி கட்சியில் சேர்த்துக் கொள்ள முடியும்?

பழனிசாமி ஒரு தீர்க்கதரிசி. இவர்கள் எல்லாம் மிகப் பெரிய சந்தர்ப்பவாதி என அவர் மனதில் பட்டுள்ளது. அதனால் எத்தனையோ வழக்குகள் போட்டாலும், அதனை எதிர்கொண்டார். எந்தச் சூழ்நிலையிலும், அவர்களை கட்சியில் சேர்க்க வேண்டும் என்கிற சிந்தனை ஒருமுறை கூட அவருக்கு வரவில்லை.

அதிமுக பிளவுபட்டதாக மாயத் தோற்றத்தை உருவாக்க முயற்சி செய்தார்கள். ஆனால், அவர்கள் பின் யாரும் செல்லவில்லை” என்று அவர் தெரிவித்தார்.

## “பச்சிளம் குழந்தைக்குக் கூட பாதுகாப்பு இல்லாத திமுக அரசு...” - தினகரன் விமர்சனம்



**சென்னை, பிப்.28:** ‘கிருஷ்ணகிரி அருகே இரண்டரை வயதுக்குழந்தையை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி கொலை செய்த திமுக நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளார். பச்சிளம் குழந்தைக்குக் கூட பாதுகாப்பில்லாத திமுக அரசை வரும் தேர்தலில் வீட்டுக்கு அனுப்புவது தான் ஒரே தீர்வு ’ என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்செட்டி அருகே இரண்டரை வயதுக் குழந்தையை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி கொலை செய்திருப்பதாக திமுகவின் இளைஞரணி நிர்வாகி ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக ஊடகங்களில் வெளியாகியிருக்கும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

பச்சிளம் குழந்தைகள், கல்லூரிக்குச் செல்லும் மாணவிகள், பணிக்குச் செல்லும் பெண்கள், வீட்டில் வசிக்கும் வயதான முதியவர்கள் என யாருக்குமே பாதுகாப்பற்ற மாநிலமாகத் தமிழகத்தை மாற்றிவிட்டு, பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலம் எனப் பெருமை பேசுவதும், பல கோடி ரூபாய் செலவில் விளம்பரம் செய்வதும் வெட்கக் கேடானது.

கஞ்சா விற்பனையில் தொடங்கி கள்ளச்சாராயம் காய்ச்சுவது உள்ளிட்ட சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டுவந்த திமுக நிர்வாகிகளைக் கண்டும் காணாமல் அலட்சியமாக இருந்ததன் விளைவே, தற்போது அரங்கேறியிருக்கும் இந்த கொடூர சம்பவத்திற்கு அடிப்படை காரணம் எனப் பொதுமக்கள் மத்தியில் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

எனவே, பச்சிளம் குழந்தை என்று பாராமல் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி கொலை செய்த குரூர மனம் படைத்த திமுக நிர்வாகிக்கு உச்சபட்ச தண்டனை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்தும் இந்நேரத்தில், தமிழகத்தில் அனைத்து தரப்பு மக்களும் நிம்மதியாக வாழ, வரும் தேர்தலில் திமுகவை நிரந்தரமாக வீட்டிற்கு அனுப்புவது தான் ஒரே தீர்வாக அமையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்’ எனத் தெரிவித்தார்

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com**